விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 142 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 27 புதன்கிழமை (10.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வீட்டுக்கு அருகில் இருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்
### இம்ரான் கான் கைது



(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தான் முன் ▷15

## மாட்டுடன் மோதுண்டு இளைஞன் உயிரிழப்பு
### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)
மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளார்.
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் பரந்தன் முல்லைத் ▷15

### உங்கள் கட்சிப் பிரச்சினையை தீர்க்க முடியாத நிலையில்
# ஜனாதிபதியாக காணிப் பிரச்சினையை எவ்வாறு என்னால் தீர்க்க முடியும்?



## தமிழரசுக் கட்சியினருடனான சந்திப்பில் மாவையுடன் கோபமடைந்த ஜனாதிபதி

- இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சந்திப்பு
- பேச்சுவார்த்தையில் கிழக்கு எம்.பிக்களையும் இணைக்க முடிவு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பர்தன் தலைமையிலான குழு நேற்று பிற்பகல் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியது.

குறித்த சந்திப்பில் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நாளை வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமை நடக்கவுள்ள ▷04

### இளவாலை வசந்தபுரத்தில்
## கிணற்றினுள் விழுந்த குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, இளவாலை-வசந்தபுரம் பகுதியில் இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று கிணற்றினுள் விழுந்து உயிரிழந்துள்ளது.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் கருணாநிதி ரக்ஸிகா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந் ▷15

## பௌத்த சின்னங்கள் மீதே சிவலிங்கம் பிரதிஷ்டை
### சபையில் சரத் வீரசேகர



- வடக்குக் கிழக்கில் பௌத்த சின்னங்கள் அழிக்கப்படுகின்றன.
- சிங்களவர்களின் பொறுமையை சோதிக்கக்கூடாது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான
**கொழும்பு றோயல் கல்லூரியின் பரீட்சை வினாத்தாள்**
உள்ளே ☛

## போலி நாணயத்தாள்களை அச்சிடும் இயந்திரத்துடன்
### யாழில் 18 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)
போலி நாணயத்தாள்களை அச்சிடும் மின்னியல் இயந்திரத்துடன் 18 வயது இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸா... கைது செய்யப்பட்டுள்ளார்.

1.3 மில்லியன் ரூபாய் பெறுமதியிடப்பட்ட போலி நாணயத்தாள்களுடன் அண்மையில் பளையில் வைத்து இளைஞர் ஒருவர் ... ▷15

### இலங்கையில் மனநோயால்
## பாதிக்கப்படும் மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கையில் மனநோய்களால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சிறப்பு மனநல மருத்துவ சங்கத்தின் தலைவரும் மருத்துவருமான டபிள்யூ.ஏ.எல். விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி போகம்பரை பழைய சிறைச் ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**

**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**

**தரகர் தேவையில்லை**

(14074)

தொடர்புகளுக்கு :- ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை**

(14074)

தொடர்புகளுக்கு :- ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

## விற்பனைக்கு

**சுதுமலை வடக்கு மானிப்பாயில் 3 பரப்புக்காணி மற்றும் 3 அறைகளுடனான வீடு விற்பனைக்கு.**

(14073)

**074 230 1967**

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் தனியார் வைத்திய நிலையத்திற்கு

- பெண் தாதியர்
- பயிற்சி பெற விரும்புபவர்கள்

**077 342 5989**

## விற்பனைக்கு

- பாவித்த ஓடுகள் 150
- பாவித்த பீலி (பிளாஸ்ரிக்) 50'

(14072)

**077 342 5989**


## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

17.08.1988 இல் ஆசிரிய சேவையில் இணைந்து கொண்ட

### செல்வி சாந்தி சிவப்பிரகாசம்

ஆசிரியர்-யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி

(14069)




அவர்கள் எமது பாடசாலையில் 06.04.2015 இல் மனைப்பொருளியல் ஆசிரியராகக் கடமையேற்று க.பொ.த சா/த பரீட்சைப் பெறுபேறுகளில் இன்று வரை 100% சித்தியைப் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர் 10.05.2023 இலிருந்து ஓய்வு பெறும் இவர் பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்புமாக வாழ வாழ்த்துகிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**


**யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி**

**காங்கேசன்துறை**




## அகவை நாள் வாழ்த்துக்கள்

### அரிவரி மழலைகளின் அடையாளம் ஞானம் ரீச்சர்




"எழுத்தறிவித்தவன் இறைவன்" எனும் ஆன்றோர் வாக்கிற்கு அமைவாக யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்களில் ஒருவராக எங்கள் முன் வாழ்ந்து கொண்டிருப்பவர் ஞானம் ரீச்சர்.

1986 ஆம் ஆண்டு காலம் முதலாக ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெறும் 2003ஆம் ஆண்டு காலம் வரையில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பகுதி ஆசிரியராக ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அரிவரி புகட்டிய ஆசான் அன்புக்குரிய ஞானம் ரீச்சர்.

எண்பது வயதுகள் ஆனபோதும் மிகவும் சீரான முத்து முத்தான தமிழ் எழுத்துக்களில் கை தளர்வடையாதவர் ஞானம் ரீச்சர்.

ஞானம் ரீச்சர் வகுப்பாசிரியர் என்றால் அந்த மாணவர்கள் அத்தனை பேரினதும் கையெழு துக்கள் அச்சுப் பதித்தவையாகவே இருக்கும்.

அந்தக் காலப் பகுதிகளில் கல்வி கற்பித்து அமரர்களாகிய முத்து ரீச்சர், புவனம் ரீச்சர், தங்கம்மா ரீச்சர் போன்றவர்களோடு தேவி ரீச்சர், பாக்கியம் ரீச்சர் ஆகியோருடன் இணைந்து ஆரம்பக் கல்வியை எங்களுக்கெல்லாம் முறையாகப் பயிற்றுவித்து ஒளிமயமான



எதிர்காலத்துக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கு ஞானம் ரீச்சர் என்றால் மிகையாகாது.

கற்றல் செயற்பாடுகளோடு இணைவாகவே உயரிய நல்ஒழுக்கப் பண்புகளை வளர்த்து பெற்றோரை மதித்துப் பழகவும் பெரியோரைக் கனம் பண்ணணவும் அரிய நற்பண்புகளை சிறுவயது முதலே அடிமனதில் ஆழமாக பதிய வைத்தவர் எங்கள் ஞானம் ரீச்சர்.

மாணவக் குழந்தைகளின் தற்துணிவு, ஆளுமை போன்றவற்றை வளர்க்கும் முகமாக மாணவர் மன்றங்களை உருவாக்கி சிறுபாடல்கள், நாடகங்கள், கதைகளை சொல்லித்தந்து எங்களைத் தயார் செய்து இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு எங்களை ஆர்வப் படுத்திய அன்பான ஆசான் எங்கள் ஞானம் ரீச்சர்.

அன்பு நிறைந்த ஆசிரியத் தாயாகவே எங்களுக்கு அரிவரி புகட்டிய ஞானம் ரீச்சரிடம் பயின்ற மழலைகள் பலர் வெவ்வேறு நாடுகளிலும் இலங்கையிலும் வைத்தியர்களாக, சட்டத்தரணிகளாக, கணக்காளர்களாக இருக்கின்றனர் என்பது யாவரும் அறிந்த ஒன்று.

13 ஆண்டு காலங்களாக உசன் இராமநாதன் மகா வித்தியாலய ஆசிரியப் பணியோடு வேரூன்றி ஆயிரமாயிரம் மழலைகளின் மணி மணியான கையெழுத்துக்களை உருவாக்கிய ஆசிரியத் தெய்வம் தனது 80 ஆவது அகவை நாளில் சீரும் சிறப்போடும் நோய் நொடியின்றி வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

**அன்றைய நினைவுகளோடு**

**உங்கள் மழலைகள்**

(14068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் பிரபாகரன் வீட்டுக்கு முன்னால் இருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று

## யாழ்.பல்கலை மாணவர்களால் ஆரம்பித்து வைப்பு







*(யாழ்ப்பாணம்)*

**விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வீட்டிற்கு முன்னாலிருந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வீடு அமைந்துள்ள வல்வெட்டித்துறை , ஆலடி பகுதியில் கஞ்சி வழங்கும் நிகழ்வை மாணவர்கள் ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடர்பில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவிக்கையில்,

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியினை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளோம்.

இந்த உயிர் காத்த கஞ்சியினையே இன்று நாம் எமது உரிமை போராட்டத்தின் ஓர் வடிவமாக, எமது மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஓர் கருவியாக எமது இளம் சமுதாயத்திற்கு கடத்த வேண்டிய ஒரு கட்டுப்பாட்டில் நாம் அனைவரும் உள்ளோம்.

நாம் எமது இனவிடுதலையை அடையும் வரை இக்குறியீடு கடத்தப்படும் என உறுதியெடுக்கின்றோம். நாம் முன்னெடுக்கும் இச் செயற்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். உங்களின் மாவட்டத்திற்கு வரும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு கஞ்சிக்கு உரிய அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்கி விடுதலைக்கான பயணத்தில் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என தெரிவித்தனர். (4-6-33-104)

---

## அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**

**மானிப்பாய் கிராம உப அலுவலகம்- ஆனைக்கோட்டை**

வட்டாரம் 11,ஆதன இலக்கம்-319
நவாலி வீதி, 17.04.2023

வட்டாரம் 11, நவாலி வீதி, ஆதன இலக்கம் 319 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்குப் பகுதி, மானிப்பாய், கோயிற்பற்று, நவாலி இறை வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு நவாலி வடக்கு (J/136) கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட "கண்டாவத்தை" எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 12 குளி 01.06 கொண்ட இவ்வாதனமானது கனடாவைச் சேர்ந்த சுப்பிரமணிய ஐயர் ரூபன் ஐயரும் சுப்பிரமணிய ஐயர் சத்தியா ஐயரும், சுப்பிரமணிய ஐயர் ஜனா ஐயரும், சுப்பிரமணிய ஐயர் பெண் இந்திரா ஐயரும் ஆகியவர்களால் நடராசா செந்தூரன் என்பவருக்கு அற்றோனித் தத்துவம் வழங்கப்பட்டு மானிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கனகராசாவும் பெண் ரேவதி பமிலாவும் ஆகியவர்களிற்கு சட்டத்தரணி தர்மசுகி காசிநாதன் முகதாவில் நிறைவேறிய 184 ஆம் இலக்க 21.11.2021 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகத்தில் (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் உட்புகுவதற்கு விண்ணப்பித்துள்ளார்.

எமது ஆதனப் பதிவேட்டின்படி சண்முகநாத சர்மா எனக் காணப்படுகின்றது. இவ்வாதனத்தின் தாய் உறுதியானது சட்டத்தரணி ஆ.தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 8092 ஆம் இலக்க 09.05,2005 ஆம் திகதிய நன்கொடை உறுதிப்படி, குறித்த மானிப்பாயைச் சேர்ந்த சண்முகநாத ஐயர் சுப்பிரமணிய ஐயர் என்பவரால் அவரின் பிள்ளைகளான சுப்பிரமணிய ஐயர் ரூபன் ஐயர், சுப்பிரமணிய ஐயர் சத்தியா ஐயர், சுப்பிரமணிய ஐயர் ஜனா ஐயர், சுப்பிரமணிய ஐயர் பெண் இந்திரா ஐயர் என்பவர்களிற்கு நன்கொடை உறுதி முடிக்கப்பட்டுள்ளது. நிலஅளவையாளர் A.லோகநாதன் அவர்களால் 15.07.2021 அன்று அளந்து தயாரிக்கப்பட்ட 1087 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தின் படி துண்டு எனச் சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு (11 குளி 03.28 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால், அவ்வுடைமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களிற்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து வேலுப்பிள்ளை கனகராசா பெண் ரேவதி பமிலா என்பவர்களிற்கு மேற்குறித்த ஆதனத்தை பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி ஆகாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை,மானிப்பாய்.**

(140...)

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 - 11 - 1962



மறைவு
07 - 05 - 2023

அமரர். **முருகேசு ஆனந்தராசா**

வதிரி கோட்டைத் தெருவை பிறப்பிடமாகவும் Zaan 25,1703ME, Heerhugowaard,Netherland இனை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஆனந்தராசா அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (07.05.2023) இலங்கையில் இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு (கனகரத்தினம்) செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொலிகண்டியைச் சேர்ந்த அமரர் தங்கவேல் (இரத்தின வாத்தியார்) மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும்,ஜானகி (மாலி,Netherland) அவர்களின் அன்புக் கணவரும், நவீந்தன்,அர்வின்(Netherland) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தசோதியின் அன்புச் சகோதரரும், மதுமிதா,ஆகாஷ்,அகிலாஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் ஆனந்தராஜா (ரவி) மற்றும் வசந்தி (இலங்கை),ஜெயந்தி (இலங்கை),சாந்தி (U.S.A), தயாளன் (U.S.A),சுகந்தி (U.S.A)அவர்களின் அன்பு மைத்துனரும், அருமைநாயகம் (இலங்கை), பாஸ்கரசோதி (இலங்கை), புலேந்திரன் (U.S.A), மாலதி (U.S.A),வசீகரன் (U.S.A)ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2023) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் சின்னக்கடை, பொலிகண்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி-6511)

ஜானகி(மாலி) +31619618711
நவீன் + 31612867248 ,பாஸ்கரசோதி 077 222 9354.

தகவல்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

சந்திப்புகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் தமிழ் எம்.பிக்களை ஒரே நேரத்தில் சந்திக்க ஜனாதிபதி ரணில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண எம்.பிக் களை அழைக்காமல் வடக்கு எம்.பிக்களை மாத்திரம் ஜனாதிபதி சந்திப்பதாகவே முன்னர் ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் நேற்றைய சந்திப் பில் இவ்விடயம் பிரஸ்தாபிக் கப்பட்டதையடுத்து அந்த முடிவை ஜனாதிபதி மாற்றி யுள்ளார்.

மேலும் நேற்றைய சந் திப்பில் மாவை சேனாதிராஜா நீங்கள் தானே ஜனாதிபதி. உடனடியாக காணிகளை விடுவிக்குமாறு கட்டளை யிட்டு காணிகளை விடுவியுங் கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலி யுறுத்தினார்.

இதன்போது சற்றுக் கோப மடைந்த ரணில், முதலில் உங்கள் கட்சிக்குள் இருக் கின்ற பிரச்சினைகளை தீருங் கள்.

அதனைக்கூட உங்களால் தீர்க்க முடியாத நிலையில் உள்ள போது, ஓர் ஜனாதி பதியாக எவ்வாறு நீங்கள் கூறு வது போன்று இந்தப் பிரச் சினையை தீர்க்க முடியும் என மாவையை நோக்கி வினா எழுப்பியிருந்தார்.

மேலும் இச்சந்திப்பு தொடர் பில் கருத்து வெளியிட்ட கட்சி யின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்,

ஜனாதிபதியுடனான சந் திப்பின்போது வியாழன் மற் றும் வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ள சந்திப்பு குறித்துப் பேசினோம். இச்சந்திப்புக் களுக்கு வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு மாத்திரம் அழைப்பு விடுக்கப்பட்டுள் ளமை தொடர்பில்எமது எதிர்ப்பை வெளிப்படுத்தினோம்.

அதுமாத்திரமன்றி நல் லிணக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விவகாரங் கள் தொடர்பில் பேசவேண்டு மெனில் நாம் கிழக்கு மாகா ணப் பாராளுமன்ற உறுப்பினர் களுடன் இணைந்துதான் அச் சந்திப்புக்களில் பங்கேற்போம் என்றும் உறுதியாகக் கூறி னோம்.


அதனையடுத்து 11 மற்றும் 12ஆம் திகதிகளில் நடை பெறவுள்ள சந்திப்புக்களுக்கு வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களையும் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுவதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

அதன்படி 11ஆம் திகதி நல்லிணக்கம் சார்ந்த விடயங் கள் தொடர்பில் கலந்துரை யாடுவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதன்கீழ் காணா மலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல்கைதிகள் விவகாரம், காணிப் பிரச்சினை, பயங்கர வாதத்தடைச்சட்டம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட பல் வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்படும். அதேபோன்று 12ஆம் திகதி அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்து ரையாடப்படும்.

மேலும் அதிகாரப்பகிர்வு குறித்துப் பேசும்போது எந் தெந்த ஆவணங்கள் குறித் துக் கவனம் செலுத்த வேண் டும் என்று ஜனாதிபதி எம்மிடம் வினவினார்.


எனவே இவ் விவகாரத் துடன் தொடர்புடைய முக்கிய கடந்தகால ஆவணங்கள் தொடர்பில் நாம் எடுத்துரைத் தோம் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை 13ஆம் திகதி சனிக்கிழமையன்று நடைபெறவுள்ள சந்திப்பில் வடமாகாண அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடு வதற்குத் தீர்மானிக்கப்பட்டி ருந்த நிலையில், தற்போது அச்சந் திப்பைப் பிற்போடுவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது என்றார். (ம-7,9,33)



கனிஷ்ட பிரிவினருக் கான தேசிய மட்ட தட கள தொடரில் கிளி/முழங் காவில் மகா வித்தியாலய மாணவன் சுமன் கீரன் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை சுவீரித் துள்ளார்.

10000 மீற்றர் ஓட்டத் தில் 35:35.92 விநாடிக ளில் ஓடி முடித்து தங்கப் பதக்கத்தையும் 5000 மீற்றர் ஓட்டத்தில் 16:12. 63 செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத் தையும் கைப்பற்றியுள் ளார். (படம்:-கனகராஜா)



கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடரில் பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி மாண வன் எஸ்.மிதுன்ராஜ் தட்டெறிதல் போட்டியில் 43.64 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தைச் சுவீகரித் துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இராணுவ வீரர் சரித் கப்புக்கொட்டு வால் எறியப்பட்ட 42.64 மீற்றர் தூரத்தையே மிதுன்ராஜ் 43.64 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

(படம்:-கனகராசா)


## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் தேர்தல் அபேட்சகர்களுக்கும் வாக்காளர்களுக்குமான அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாசபை உறுப்பினர்கள் தேர்தல் 25.06.2023 ஞாயிற்றுக்கிழமை **மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரை** யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க நடப்பு வருட அங்கத்தவர்கள் மட்டுமே இத்தேர்தலில் போட்டியிடவும் வாக்களிக்கவும் உரிமையுடையவர் ஆவர்.

நடப்பு வருட அங்கத்தவர் பட்டியல் **பின்வரும் இடங்களில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.**

01.மருதடி விநாயகர் ஆலயம் - மானிப்பாய்
02.பிரதேச சபை (உப அலுவலகம் ) - மானிப்பாய்
03.மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்
04.மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம்
05.பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்

தேர்தலில் போட்டியிட விரும்பும் அங்கத்தவர்கள் தேர்தல் வைப்புப்பணமாக ரூபா 1000/= இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் உள்ள சேமிப்பு கணக்கு இல 7292936 இல் வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை நியமனப்பத்திரத்துடன் இணைக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படாத நியமனப்பத்திரங்கள் தேர்தல் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**அபேட்சகர் நியமனப்பத்திரங்களை பெறுதல்**

நியமனப்பத்திரங்களைப் பெறும் இடம்
: பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்
நாள் : 12.05.2023 - 19.05.2023 (அலுவலக நாட்கள்)
நேரம் : 9.30 மணி தொடக்கம் 4.15 மணி வரை

**அபேட்சகர் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தல்**

இடம் : பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்
நாள் : 24.5.2023
நேரம் : 9.00 மணி - 12.00 மணி
வாபஸ்பெறும் கால எல்லை : 25.05.2023 - 30.05.2023 (அலுவலக நாட்கள்)
மு.ப. 9.00 மணி - நண்பகல் 12.00 மணி

தேர்தல் குழு
மருதடி விநாயகர் ஆலயம்

(C-6516)



## சேல்ஸ்மான் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை. (14076)

சென்னை பெசன் வேல்ட்
63, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



## 1ம் ஆண்டு நினைவில்

அமரர் மகாதேவன் கெவின்ஸ்லெபோன்
தொழில்நுட்பக்கல்லூரி மாணவன் Level 05



மண் மகிழ 15.04.1998 | விண் மகிழ 10.05.2022

அவர்களின் நினைவு தினத்தில்
அன்புமகனே, ஆசைமகனே,
பாசமான சகோதரனே
உன் இழப்பில் கதி கலங்கி
கண்ணீா உதித்து
ஓராண்டு சென்றுவிட்டதே – ஆனாலும்
கண்களில் நின்று கண்ணீா ஓயவில்லை
உன் நினைவும் எம் மனக் கண்முன் நின்று
மறையவே இல்லை
நின் பெருமையெல்லாம் மண்ணுக்குள்
புதைந்து விட்டது என்று எண்ணினோம்
ஆனால் நீ எல்லோரினதும்
உள்ளத்திலும் ஒளிர்கின்றாய்

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(C-6517)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் மகளை தேடும் இலங்கை அரசாங்கம்

## இந்திய இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(டில்லி)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மனைவி மற்றும் மகள் இன்னமும் வாழ்வதற்கான சாத்தியம் இருப்பதாக ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரி, புவி அரசியல் ஆய்வாளர் மேஜர் மதன்குமார் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகாவை தேடி இலங்கை உளவுத்துறையில் முக்கியமான அதிகாரி தலைமையில் ஒரு தேடுதல் நடவடிக்கை இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுவதாக முக்கிய பத்திரிகையொன்றில் வெளியாகியிருந்த கட்டுரை தொடர்பில் வினவப்பட்ட போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் இருப்பதாக நெடுமாறன் ஒரு விடயத்தை முன்வைத்தார்.

இந்த நிலையில் இலங்கை இராணுவத்தில் பிரிகேடியர் தரத்திலுள்ள அதிகாரியொருவர், "பிரபாகரன் கொல்லப்பட்டார் அதை பொட்டம்மான் மற்றும் கருணா உறுதி செய்தனர். மரபணு பரிசோதனையையும் நாம் எடுத்துள்ளோம்.

அந்த பரிசோதனையில் உயிரிழந்தது பிரபாகரன் தான் என உறுதி செய்யப்பட்டது" என நெடுமாறனின் அறிவிப்பிற்கு மறுப்பு செய்தியொன்றை விடுத்திருந்தார்.

ஆனால் பிரபாகரனின் மூத்த மகன் சார்ள்ஸ் கொல்லப்பட்டது தெரியும். இளைய மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டதும் தெரியும். எனினும் அவரது மனைவி மற்றும் மகள் எங்கே என்பது இதுவரையில் தெரியவில்லை.

காணாமல் போனோர் பட்டியலில் தான் அவர்கள் உள்ளனர். எனவே அவர்கள் வாழ்வதற்கான சாத்தியம் இருக்கிறது. இப்படியான சூழலில் விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கான சாத்தியம் இருப்பதாக ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம்.

இதற்கான சாத்தியம் இருக்கும் சந்தர்ப்பத்தில் இதனால் நேரடியாக பாதிக்கப்படுவது இலங்கையில் தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கமே என அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# தமிழர்களின் குடிப்பரம்பலை அழிக்கும் முயற்சியை அரசு கைவிட வேண்டும்

## சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அதிகாரக் கரங்களினால் வலிந்து பறித்தெடுத்து, அந்நிலங்களில் பௌத்த விகாரைகள் அமைத்தல், இராணுவ முகாம்களை கட்டமைத்தல், சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குதல், சீனா உள்ளிட்ட நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவற்றை வழங்குதல் என்பவற்றின் ஊடாக, தமிழ் மக்களின் குடிப்பரம்பலை அடியோடு அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் முன்னெடுப்பதை சிங்கள இனவாத அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அண்மைக் காலங்களில் இலங்கைத் தொல் பொருளியல் திணைக்களத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 37 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்து, தன்னால் தயாரிக்கப்பட்ட விபரண அறிக்கை ஒன்றையும் சபாபீடத்துக்கு அவர் சமர்ப்பித்துள்ளார். (4-6)

# அரச மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறை

(கொழும்பு)

அரச மருத்துவமன்னைகளில் கட்டண செலுத்தும் சிகிச்சை அறை வசதியை அறிமுகப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது:

இலங்கை பிரஜைகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் நாடளாவிய ரீதியிலுள்ள அரசாங்க மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறைகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச சோலார் பேனல்கள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

25,000 ரூபாவிற்கும் குறைந்த வருமானம் பெறும் குடியிருப்பாளர்களுக்கு இலவச சோலார் பேனல்கள் வழங்கும் திட்டமானது அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு தொடங்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் 500 மெகா வோட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தேசிய திட்டத்திற்குள் சேர்க்கப்படும். இந்த திட்டம் முதலில் இரண்டு கட்டங்களாக செயற்படுத்தப்படும். முதற்கட்டமாக 10,000 வீடுகளுக்கும் இரண்டாம் கட்டத்தின் கீழ் 15,000 வீடுகளுக்கும் சோலார் பேனல்கள் மூலம் மின்சாரம் வழங்கப்படும். ஒரு வீட்டிற்காக 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

தேசிய வீடமைப்பு மேம்பாட்டு ஆணையத்தின் அறிக்கைகளின்படி, 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டில், பல்வேறு காரணங்களால் கட்டுமானத்தைத் தொடங்கி நிறுத்தப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 69000 ஆகும்.

அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25000 வீடுகளுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்படும். அந்த வீடுகளின் மேற்கூரையில் அமைக்கப்பட்டுள்ள சோலார் பேனல் கள் மூலம் 20 கிலோவாட் மின் சாரம் உற்பத்தி செய்யப்படும்.

வீடுகளில் மின்சாரம் பயன்படுத்தப்படுவதைத் தவிர மிகுதி தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற திருமதி.அழகுராணி சிவானந்தம் அவர்களது

மணிவிழா வாழ்த்துப்பா



திருமதி. அ. சிவானந்தம்
(B.A, PGDE , SLTS I)
பிரதி அதிபர்

யா / கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாலயம்
01. 01. 1994 - 04. 05. 2002
வ / கனகராயன்குளம் மகா வித்தியாலயம்
05. 05. 2002 - 04. 01. 2007
யா / மானிப்பாய் இந்துக்கல்லூரி
05. 01. 2007 - 01. 11. 2010
வ / கனகராயன்குளம் மகா வித்தியாலயம்
02. 11. 2010 - 21. 04. 2015
யா / ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை
22. 04. 2015 - 31. 12. 2022

ஈழத்தின் மணிமுடியாம் யாழ் மண்ணில்
சுதுமலை பதி ஈன்ற கல்வியின் ஆசான்
கல்விதனை குறிக்கோளாய் ஏற்று
கல்விமாணிப் பட்டம் பெற்ற வித்தகியே
கல்விப் பணிக்காய் தன்னை அர்ப்பணித்து
கலங்கரை விளக்காய் அமைந்த செம்மல் நீ

அந்தண்மை யடக்கம் அணியென கொண்ட
சிந்தை யழகினாள் செந்தமிழ் பற்றுடையாள்
செந்நெறி திறம்பாச் சேவையினால்
முந்தியிருக்கச் சபையில் வைத்தான் வாழியவே!

பயனை எதிர்பாரா பண்புடையாள்
நயமான பேச்சால் அனைவரையும் வெல்வாள்
சுயமாக மாணவரைச் சிந்திக்கத் தூண்டிய
செயற்றிறம்மிக் குடையாய் வாழியவே!

பல்லாண்டு காலம் பாரினில் வாழ்ந்திருந்து
பல பணிகள் நானிலம் போற்றப் புரிந்திடுவாய்
எப்பொழுதும் இன்சொல் உடையாய் வாழி!
அல்லலின்றி அன்புடனே அனைவரும் வாழி!
அணைக்கும் கரமுடனே ஆதரிப்பாய் வாழி!
இறைவன் பேரருளால் வளமுடனே வாழி, வாழி!

Congratulations!

Thank you for all the support, guidance and contribution you provided during the time with us, we will keep your gesture forever in our hearts and cherish the happy memories forever. As you enter an amazing new chapter of your life, we want to send our lovely wishes for your retirement.
HAPPY RETIREMENT!!!

(14066)

பாடசாலைச் சமூகம்.
(அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.)


# மே முதல் வாரத்தில் 1896 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

மே முதல் வாரத்தில் இலங்கை யில் 1,896 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இவர்களில் அதிகமானோர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேலகுணவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், கடந்த மாதத்தின் இறுதி வாரத்துடன் ஒப்பிடுகையில், இம் மாதத்தின் முதல் வாரத்தில் கம் பஹா மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கம்பஹா போன்ற அதிக நோயாளர்கள் பதிவாகும் மாவட்டங்களுக்கு நிதியளித்து விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் மக்கள் தமது வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

# டைனமைட் வெடிபொருட்களுடன் கைதான மீனவர்களுக்கு விளக்கமறியல்



(மன்னார்)

மன்னார்- வங்காலை கடற்பரப்பில் வைத்து டைனமைட் வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்ட மன்னார் பகுதியைச் சேர்ந்த 7 மீனவர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டார்.

மன்னார் வங்காலை கடற்பரப்பில் வைத்து டைனமைட் வெடி பொருட்களுடன் மன்னாரைச் சேர்ந்த 7 மீனவர்களை நேற்று முன்தினம் திங்கட் கிழமை வங்காலை பிரதேச கடற்படை ண்கைது செய்து மன்னார் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ஊடாக வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன் போது மீனவர்களிடம் இருந்து டைனமைட் வெடி பொருட்களும் மீட்கப்பட்டிருந்தது.

மீன்கள் அற்ற நிலையில் வெடி பொருட்கள் மட்டும் உடமையில் இருந்ததால் வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வங்காலை பொலிஸார் விசாரணையின் பின் குறித்த மீனவர்களை நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி னர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை நிலையம் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

**01.06.2023 தொடக்கம் 31.05.2024 வரை**

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துநர்களிடமிருந்து 01.06.2023 தொடக்கம் 31.05.2024 வரையான காலப்பகுதிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலைப் பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்களை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.
    1. பிரதான சிற்றுண்டிச்சாலை
    2. பல்பொருள் விற்பனை நிலையம் (Food City)
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்' என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபாய் 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 10.05.2023 தொடக்கம் 22.05.2023 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 16.05.2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபாய் 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இ ணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் மற்றும் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக் கேள்விகள் கடித உறையின் மேல் பகுதியில் சிற்றுண்டிச்சாலையின் பெயரினைக் குறிப்பிட்டு 23.05.2023 ஆம் திகதி (பி.ப) 10.00 மணிக்கு முன்பதாக இவ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
8. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021 222 3141 தொடர்பை ஏற்படுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
9. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப் பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப் பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும். (சி-6510)

**தலைவர்/பிராந்திய பெறுகைக்குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளதாக சில ஊடகங்கள் கூறிய போதிலும் மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை என இலங்கையின் இரண்டு பிரதான கோதுமை மா நிறுவனங்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (நி)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட செயலக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரக்கிளையின் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்களுக்கான கட்டடக்கூறுகள் நிரற்படுத்தல் மற்றும் தொகை மதிப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டப அறை இல. 17 இல் இடம் பெறும். (6)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை. திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

வெளிவாரிப் பரீட்சைகள்

வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2021

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் ஜூலை மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி **26.05.2023 (வெள்ளிக்கிழமை)** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

உதவிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்.** (சி-6512)

# இராசிபலன்

10.05.2023
சித்திரை 27, புதன்கிழமை
பஞ்சமி பிற்பகல் - 3.32 மணிவரை

பூராடம் பிற்பகல் 5.53 மணிவரை
சுபநேரம் -4.24-5.54 மணிவரை
இராகுகாலம்-11.54-1.24 மணிவரை

சந்திராஷ்டமம் - ரோகினி, மிருகசீரிடம்

**வளவன்**

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்** சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்த வேண்டுமென்ற எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**மகரம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள்,இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்,மனச் சஞ்சலங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கும்பம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்,தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் பாராது பாடுபடுவீர்கள்.

**மீனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்,வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உற்சாகமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புனர்வாழ்வு சட்ட மூலம் குறித்து ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்கள் கவலை

(கொழும்பு)

கருத்துச் சுதந்திரம், கருத்து, சங்கம் மற்றும் மதம் அல்லது நம்பிக்கை ஆகியவற்றின் உரிமைகளை புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் பாதிக்கலாம் என ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம் மூலம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பயங்கரவாதம் பற்றிய வரையறைகளை இலங்கை அரசாங்கம் பயன்படுத்த வேண்டும் என்றும் சர்வதேச விதிமுறைகளுக்கு இணங்க இதனை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

தன்னிச்சையான சுதந்திரம் பறிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் தடை செய்வதற்கும் சித்திரவதை மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் போவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்தவும் அழைப்பு விடுத்துள்ளனர்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து புனர்வாழ்வு சட்டமூலத்தின் திருத்தங்கள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பான சில விடயங்களை கடைப்பிடிக்கவில்லை.

இதேவேளை புனர்வாழ்வு சட்டமூலத்தின் பல விதிகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடமைகளுடன் நேரடியாக முரண்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# 92,000 இலங்கையர்கள் அகதிகளாக தமிழகத்தில் இருக்கின்றனர்

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி

(கொழும்பு)

அகதிகளாகப் பதிவு செய்து 92,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது தமிழ்நாட்டில் தங்கியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், 92 ஆயிரத்து 435 இலங்கையர்கள் அகதி முகாம்களுக்கு உள்ளோ அல்லது அதற்கு வெளியேயோ தமிழ்நாட்டில் தங்கியுள்ளனர்.

தமிழகத்தில் தற்போது மொத்தம் 106 அகதிகள் முகாம்கள் இயங்கி வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். இதேவேளை உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் பெருமளவான இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளதாகவும் அமைச்சர் அலிசப்ரி குறிப்பிட்டார். (நி)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் -24 ஆஸ்பத்திரி வீதியில் 721 ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் 'திரு. p.மைக்கல்' என்ற பெயரில் எமது பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் யோவான் மியாம்பிள்ளை உம் பெண் சிவநேசனும் 13.05.1938 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பெர்னாட் யுவக்கீம்பிள்ளை முகதாவில் 19614 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய உறுதி மூலம் எலிசபேத் செல்லம்மா என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை டேவிற் லிகோரி 03.11.2017 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திரு J.S.A மதுரநாயகம் முகதாவில் 3777 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் கந்தசாமி ராமு பெண் அருள்மலர் ஈகை செய்துள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று, கரையூர் இறை. பிரதேச செயலர் பிரிவு: யாழ்ப்பாணம், யாழ்ப்பாண மாநகர சபை, கிராமசேவகர் பிரிவு: J/74 **"வீரபத்திரன் புலம்"** நிலப்பரப்பு 5 1/4 கல்வீடும் செய்வான் பயிர்களும் இந்த நிலப்பரப்பு 5 1/4 க்கும் எல்லை.

கிழக்கு:- ஒழுங்கை.
வடக்கு:- மனுவல் மகள் மாகிறேற்றின் ஆதனம்.
மேற்கு:- சாமுவேல் சவரிமுத்துவினதும் பங்காளருக்குமுரிய ஆதனம்.
தெற்கு:- றோட்டு.

இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 2. ஆனால் இது பின்னர் 06.06.2017 இல் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 2880 ஆம் இலக்கத்தில் அளந்து தயாரித்த நிலஅளவைப்படத்தில் Lot I எனக் குறிப்பிட்டப்பட்ட துண்டாகிய நிலப்பரப்பு 1 குளி 14 ம் வீட்டின் ஒரு பகுதியும், கிணறும் மலசலகூடமும்.

இந்த நிலப்பரப்பு 1 குளி 14 க்கும் எல்லை.

கிழக்கு :- பிலிப் கபிரியேல் டேவிட் உம் பெண் எலிசபெத்தினதும் மறுபேரினதும் ஆதனம்.
வடக்கு :- மாகிறர் ரட்ணம் மனுவலின் ஆதனம்.
மேற்கு :-திருமதி ரிச்சேட்ஸ் இனதும், சாமுவேல் சவரிமுத்துவினதும் பங்காளரினதும் ஆதனம்.
தெற்கு :- ஆஸ்பத்திரி வீதி.

மேலும் இக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் கிழக்குப் பக்க ஆதனத்திற்கு கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் அடங்கலாக,

தற்போது கந்தசாமி ராமு பெண் அருள்மலர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி ராமு பெண் அருள்மலர் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-6508)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -18, (பழைய வட்டாரம் -08) கடற்கரை வீதி, ஆதன இல, 890/20 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் **"சொந்தக்காரர்"** என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த வினாசித்தம்பி சின்னத்துரை அவர்கள் 11.05.1967 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சு.செ. மகாதேவா முகதாவில் 4111 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் அவ்வூரைச் சேர்ந்த சின்னத்தம்பி திருநாவுக்கரசுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கிலிருக்கும் திருநாவுக்கரசு அரியமலர், திருநாவுக்கரசு யமுனாராணியும் அவ்வூர் திருநாவுக்கரசு லலிதாம்பிகையுமாகிய அவர்கள் 15.02.1985 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வே.நடராசா முகதாவில் 1999 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் அவ்வூர் இல. 83/9 ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த சித்திவிநாயகர் ஆறுமுகம் நவரத்தினத்திற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, இல 83/9 சேர்ந்த சித்திவிநாயகர் ஆறுமுகம் நவரத்தினமும் பெண் இராசமணியும் ஆகியவர்கள் 25.04.1995 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு றெஜீனாரிறோஸ் அந்தோனிப்பிள்ளை முகதாவில் 1411 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் சின்னத்தம்பி தங்கராசாவுக்கும் பெண் சந்திரமலருக்கும் வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறை துண்டி, இல 560, சேர்ந்த சின்னத்தம்பி தங்கராசாவும் பெண் சந்திரமலரும் 13.07.2011 ஆம். திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜொனி சுவின்ரன் அனிரஸ் மதுரநாயகம் முகதாவில் 222 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் அவ்வூர் விமலதாஸ் சாள்ஸ் விவியன் பெண் தர்சிகாவிற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை துண்டி, இல, 560, சேர்ந்த விமலதாஸ் சாள்ஸ் விவியன் பெண் தர்சிகா ஆகியவர்கள் 14.03.2019 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெயத்சித்திரா சிறீதரன் முகதாவில் 3638 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை துண்டி, இல. 560, சேர்ந்த சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் யோசப் மற்றும் பெண் பற்றிமா அமலமேரிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி, குருசோவீதி, இல. 175, சேர்ந்த சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் யோசப் பெண் பற்றிமா அமலமேரி 16.10.2020 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெயத்சித்திரா சிறீதரன் முகதாவில் 4158 ஆம் இலக்கத்தில் உறுதிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியுள்ளனர்.

### ஆதன விபரம்

வடமாகாணம் -யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை இது யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதியில் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட J/61 கிராம அலுவலர் பிரிவில் உள்ள **"கடற்கரைவயல்"** நெற்பரப்பு 40 இதில் தெற்குப் புறமாக நெற்பரப்பு 14 குளி 9 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் சி.இராசகாரியரினால் 1984.04.23 ஆம் திகதி 3766 ஆம் இலக்கத்தில் அளந்த நிலஅளவைப்படத்தில் லொட் 6 எனக் காட்டப்பட்ட பகுதி நெற்பரப்பு ஒன்று (நெற்பரப்பு 01) இந்த நெற்பரப்பு ஒன்றுக்கும் எல்லைகள்.

கிழக்கு :- லொட் 7A எனக் காட்டப்பட்ட கந்தையா கமல்ராசின் ஆதனம்.
வடக்கு :- ஒழுங்கை.
மேற்கு :- லொட் 5 எனக் காட்டப்பட்ட D.E சாமுவேலுக்கும் பெண் றெஜீனா எலிசபேத்திற்கும் உரிய ஆதனம்.
தெற்கு :- வாய்க்கால், இதிலடங்கலும்.

தற்போது யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, குருசோ வீதி, இல.175,சேர்ந்த சந்தியாப்பிள்ளை 'ஸ்ரனிஸ்லாஸ் யோசேப் மனோகரன் பெண் பற்றிமா அமலமேரி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஸ்ரனிஸ்லாஸ் யோசேப் மனோகரன் பெண் பற்றிமா அமலமேரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-6509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் திருக்கேதீச்சரத்தின் வருடாந்த திருவிழாவிற்கான முதல் பந்தல் கால்நாட்டும் நிகழ்வு ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ கருணானந்த குருக்கள் தலைமையில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது. (படம்:கணேசலிங்கம்)

### குளத்து நீரேந்துப் பிரதேசத்தில்

## சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வேலியை அகற்றுமாறு கட்டளை பிறப்பிப்பு

(குருமன்காடு)

வவுனியா பட்டானிச்சூர் புளியங்குளத்தின் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வேலியினை அகற்றுவதற்கான கட்டளை வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பிரதி ஆணையாளர் பா.தேவரதன் என்பவரினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வவுனியா கோவில்குளம் கிராம நிலதாரி பிரிவில் அமைந்துள்ள பட்டானிச்சூர் கமநலசேவை நிலையத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பட்டானிச்சூர் புளியங்குளமானது கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான அளவை செய்யப்பட்டு எல்லைக்கற்கள் இடப்பட்டுள்ள குளமாகும்.


இங்குசட்டவிரோதமானமுறையில் இனம் தெரியாதோர்களால் வேலி அடைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதனால் 2011 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 38(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 83(1) இன் பிரகாரம் அடைக்கப்பட்டவர்களாலே சட்ட விரோதமாக அடைக்கப்பட்ட வேலியை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பு உடனடியாக அகற்றுமாறு கட்டளை இடப்படுகின்றது.

அவர்களால் அகற்ற தவறின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் , கோவில்குளம் கமநல சேவை நிலையம் என்பவரால் பொருத்தமான நிறுவனங்களின் உதவியுடன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அதற்கு செலவான நிதி உரிய சட்டவிரோத வேலியடைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட நபர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-250)

### மாணவர்களை கடத்த முயற்சி

# மன்னார் பாடசாலைகளுக்கு விசேட இராணுவ பாதுகாப்பு



(மன்னார்)

மன்னாரில் கடந்த சில நாட்களாக சிறுவர்களை இலக்கு வைத்து கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் கடந்த சனிக்கிழமை மற்றும் நேற்று முன்தினம் மக்கள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாக பயணித்த இரு சிறுவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்வி பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னாரில் உள்ள பாடசாலைகளுக்கான விசேட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதுடன் பொலிஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரம் அதிகளவான பெற்றோர்களும் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு வருவதையும் மாணவர்கள் குழுக்களாக பயணிப்பதையும் வீதிகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் குறித்த கடத்தல் முயற்சி தொடர்பில் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் குறித்த கடத்தல் கும்பல் மற்றும் வாகனம் தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-285)

# வில்லூன்றி விநாயகருக்கு இன்று மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றி விநாயகராலய வருடாந்தப் மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்தமண்டபப் பூசை நடைபெறும். 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஏழு மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4)

# தேனீ வளர்ப்புக்கான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையமும் விவசாயப் பிரிவும் இணைந்து நீட்டித்தும் தேனீ வளர்ப்புக்கான பயிற்சிப் பட்டறையானது எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமையன்று காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக வளாகத்தினுள் அமைந்துள்ள விதாதா வள நிலையைக் கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

மருத்துவக் குணமுடைய வீட்டுக்குத் தேவையான தேன் உற்பத்தியினை ஊக்குவிக்கு முகமாகவும் மற்றும் இத் துறையில் சுயதொழில் முயலுநர்களை உருவாக்கும் நோக்கிலும் இப்பயிற்சிப் பட்டறையானது நடத்தப்படவுள்ளது.

மேலும் இத்தேனீ வளர்ப்பானது வீட்டிலுள்ள மரம், செடி கொடிகளில் அதிக காய் கனிகளையும் தோற்றுவிக்க உதவும் செயன்முறையாகவும் அமையும்.

எனவே, இத் தேனீ வளர்ப்பில் ஆர்வம் உள்ள வர்களும், இத்துறையில் சுயதொழிலினை உருவாக்க விரும்புவர்களும் 021226 4958 என்ற தொலைபேசி யினூடாக 16.05.2023 ற்கு முன் பதிவுகளை மேற்கொள் வதுடன் பயிற்சிப்பட்டறையில் கலந்து பயன் பெறுமாறும் பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (4-6)

# மோ.சைக்கிள் திருட்டு

## யாழில் திடீரென அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் அண்மைய நாட்களில் மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.நகர்ப்புற பகுதியில் வீதிகளில், வீட்டுக்கு முன்னால் மோட்டார் சைக்கிளை நிறுத்தி செல்வோர் மோட்டார் சைக்கிள்களில் திறப்பினை விட்டு செல்லும் மோட்டார் சைக்கிள்களை அவதானித்து மோட்டார் சைக்கிளை எடுத்துச் செல்லும் கும்பல் எரிபொருள் தாங்கியில் இருக்கும் எரிபொருள் முடியும் வரை மோட்டார் சைக்கிளை ஓடிவிட்டு ஆட்கள் நடமாட்ட மற்ற வீதிகளில் நிறுத்தி விட்டு செல்லும் சம்பவங்கள் அண்மைய நாட்களில் அதிகரித்துள்ளன. கடந்த இரண்டு நாட்களில் மாத்திரம் [illegible] சம்பவங்கள் பதிவாகி[illegible] பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே யாழ்ப்பாண நகர் பகுதியில் மோட்டார் சைக்கிள்களை திறப்பு எடுக்காமல் நிறுத்தி செல்ல வேண்டாம் என வும் மோட்டார் சைக்கிள் திறப்பினை கையுடன் எடுத்துச் செல்லுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (4-6-33)

### மணவாளக்கோலம்

(கரணவாய்)

சண்டில் ஆதிஞான வைரவரின் மணவாளக் கோல உற்சவம் இன்று புதன்கிழமை காலை நவன அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் [illegible] தொடர்ந்து [illegible] மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (4-6)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 200 | 250 |
| தக்காளி | 200 | 250 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 200 | 300 | 250 |
| கரட் | 120 | 190 | 150 | 250 |
| பூசணி | 60 | 40 | 50 | 80 |
| புடோல் | 120 | 160 | 120 | 160 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 350 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 140 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 280 | 200 |
| லீக்ஸ் | 280 | 260 | 300 | 320 |
| பீற்றூட் | 250 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 | 800 |
| போஞ்சி | 350 | 350 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 120 | 160 |
| தேசிக்காய் | 400 | 350 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 200 | 250 | 300 |
| வெங்காயப்பூ | — | — | 400 | 600 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | — | 150 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகிக்கும் வெயிலும் பீடைகளின் பெருக்கமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நம் மக்கள் தற்போது முழுமையாக உணரத் தலைப்பட்டிருப்பதனை அன்றாடம் நிகழும் பல்வேறு நிகழ்வுகளிலிருந்து அறிந்து கொள்ள முடியும். காலநிலையை நிர்ணயிக்கும் அலகுகளில் தப்பிதமான மழைவீழ்ச்சியும் வெப்பத்தின் அதீத அதிகரிப்பும் விவசாயச் செய்கையினை முழுவதுமாக பாதித்திருக்கின்றது. கால்நடைகள் மிருகங்கள், பறவைகள் நீரின்றி தவிக்கும் நிலையை அவசியம் அனைவரும் உணர்ந்திருப்பர். வளிமண்டல வெப்பநிலை இன்னும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ள நிலையில் அனைவரும் உடல் மற்றும் உளரீதியான நோய்கள் வருமுன் பாதுகாத்தல் அவசியமானதாகும். உணவுத் தேவையில் நாம் தற்போது பின்னடைவாகியிருக்கின்றோம் என்பதனை எமது உற்பத்தியின் தளம் பலிலிருந்து அவதானிக்க முடிகின்றது. மரக்கறிப் பயிர்கள் தற்போது விலை குறைந்திருந்தாலும் மீண்டும் உச்சம் தொடும் காலம் வெகுதூரமில்லை. இதற்கான காரணங்கள் பலவாகினும் உற்பத்தி குறைந்திருப்பது அதிலொரு முக்கியமான காரணமாகும்.

காலநிலை நாம் எப்போதும் உணராத நிலையைத் தொட்டிருக்கின்றது. இந்த உயர்வான வெப்பநிலை ஏப்ரல் கடைசி மற்றும் மே மற்றும் ஜுன், ஜுலை மாதங்களில் உணரப்படுவதுண்டு. ஆனால் அதிகரிக்கும் வெப்பநிலை ஒரு நிலையைத் தாண்டி மீண்டும் உயர்வடைவதும் மழைவீழ்ச்சி அருகிப் போவதும் காலநிலையில் பாரியளவில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றதென்பதனை கட்டிங் கூறுகின்றன. எமது சூழல் மாற்றமடையத் தொடங்கி விட்டது என்பதனை மாற்றி உலக சூழல் மாற்றத்துக்கேற்றவாறு ஒப்பிசைக்கத் தொடங்கியிருக்கின்றது. காலங்காலமாக இருந்து வந்த பருவநிலைகளில் மாற்றங்கள் பூகோள ரீதியாக ஏற்படத் தொடங்கியது எமக்கான கடினமான காலமாக உணரப்படுகின்றது. இச்சிறு தீவில் இன்னோரன்ன மாற்றங்கள் ஏற்படுவது ஆச்சரியமான காரணமாக இருப்பினும் இந்த மாற்றம் பாரியளவில் மக்களின் வாழ்வாதாரத்தை அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைத்திருக்கின்றது.

குறிப்பாக சாறு உறுஞ்சும் பூச்சிகளின் இனப்பெருக்கம் வெப்பநிலை அதிகரிப்போடு அதிகரிப்பதாகவே கணிக்கப்படுகின்றன. இவ்வாறான பூச்சிப்பீடைகள் வெப்பநிலை அதிகரிக்க தமது வாழ்க்கை வட்டத்தை சுருக்கி விரைவிலேயே பல்கிப் பெருகுகின்றன. காலநிலையின் முக்கிய அம்சமான வெப்பநிலை வாழ்க்கை வட்டத்தை மாற்றி விரைந்து பெருகுவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதனால் இக்காலகட்டத்தில் பூச்சி பீடைகள் மற்றும் நோய்கள் விரைந்து அதிகரிக்கும் நிலைமையைக் கொண்டிருக்கின்றன.

### இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




**வெண்ணீயினுடைய தாக்கம்**

வெள்ளை ஈ எனக் பெயரிட்டு இது தவறாக ஈக்கள் வகையானதான பூச்சி பீடையாக கருதுகின்றனர். மாறாக தாவரங்களில் குறிப்பாக இளநீர் தென்னைகளில் சாறு உறுஞ்சும் வகையினதாக குத்தியுறுஞ்சும் வாயுறுப்புக்களைக் கொண்டிருப்பதனால் இவற்றை கெமிப்தீறாவருணத்தில் அடக்கியிருக்கின்றார்கள். வெண்ணீ (white fly) என அழைப்பதே சிறந்தது. இங்கு எப்படி அழைப்பது என்பது முக்கியமல்ல. இதனுடைய பரம்பல், குடித்தொகைப் பெருக்கம், தாவரங்களில் ஏற்படுத்தப்படும் சேதங்கள் மிக முக்கியமானவையாகும். இளநீர் தென்னைகளின் ஓலைகளில் வெண்ணீயினுடைய தாக்கம் மிகவும் விரைவாக ஏற்பட்டு இலைகள் கருகி கறுப்பு நிறமாக தோற்றமளிக்கின்றன. இதில் முக்கியமான விடயமாக இவ்வாறான வெண்ணீக்கள் தாம் குத்தியுறுஞ்சி உண்ணுகின்ற உணவின் ஏறக்குறைய 50 சதவீதமானவற்றை தமக்கான உணவுத்தேவைக்காக சமிபாடடையச் செய்து அகத்துறுஞ்சுகின்றன. மீதியை ஒரு வகை தேன் சுரப்பாக வெளிவிடுகின்றன. இது குத்தியுறுஞ்சும் வகையான பூச்சிகளின் குணமாக இருப்பதனால் இவ்வாறான தேன் சுரப்புகள் கீழுள்ள இலைகளில் தாவரங்களில் இன்னும் கிணறுகளில் நேரடியாக விழுவதனால் அதில் கிளடிஸ்போறியம் அல்லது கப்நோடியம் ஒரு வகை என்னும் பூஞ்சணம் வளரத் தொடங்கிவிடும். இந்த பூஞ்சணத்தால் நேரடியான பாதிப்பு மனிதனுக்கு இல்லையென்றாலும் பூஞ்சணம் இலைப்பரப்பு முழுவதுமாக வளர்ந்து விடுவதனால் தாவரங்களின் ஒளித்தொகுப்பு பாதிக்கப்படுவதுடன் பூஞ்சணம் வளரும் போது அவற்றினாலான தாக்கம் அதிகரித்துக் காணப்படும்.

மேற்கூறிய வெண்ணீ தென்னோலையின் கீழ்ப்புறத்தில் அதிக எண்ணிக்கையுடையதாகவே ஓலையின்இலைகளுக்குள் மறைந்து வாழ்கின்றது. இவை தற்போது யாழ்ப்பாணத்தில் வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்படும் அகன்ற இலைஜம்பு, வாழை குறிப்பாக கப்பல் வாழை (கீழ்ப்பக்கத்து வாழையிலைகளை அவதானிக்கலாம்) மிளகு, வெற்றிலை இன்னும் பல அகன்ற இலை அழகுத் தாவரங்களின் பின்பக்கத்தில் முட்டையிட்டு பொரித்து பல்கிப் பெருகுவதை அவதானிக்கலாம். இவ்வாறாக அதிகரித்த உயிரங்கிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது சுலபமல்ல.

வெண்ணீக்கள் மென்மையானஉடலமைப்பைக்கொண்ட நாலிறகுள்ள ஒரு வகையான பூச்சியினத்தை சார்ந்தவை. அதனால் அதுமென்மையானதாக ஆறு கால்களை கொண்டதாக அறியப்பட்டுள்ளது. இவற்றினால் சாறு உறுஞ்சப்படும் போது அப்பகுதி வெளிறியதாக காணப்படும். வாழைகளில் பல இடங்களில் பாரியளவில் இவ்வாறான வெண்ணீ குடித்தொகை காணப்படுகின்றன. அதிலும் அவை கீழ்ப்பகுதியிலுள்ள வாழை இலைகளில் ஓரங்குல விட்டத்திலான வட்ட வடிவமான மெழுகுச்சுரப்பினை ஏற்படுத்தி அதில் முட்டையும் இட்டு இளவயது வெண்ணீகளின் பருவங்கள் அதிகமாக காணப்படுகின்றன. வாழைகளில் வெண்ணீக்களின் தாக்கம் நேரடியாக அதிகமாக காண முடியவில்லை. ஆனால் அவை வாழையிலைகளின் கீழ்ப்பகுதியில் அதிகமாக முட்டையிட்டு இவகுவாக பரவி விடுகின்றன. ஆதலினால் தென்னைகளுக்கு மருந்து தெளித்தால் மட்டும் வெண்ணீக்களினை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது. ஆனால் வெண்ணீக்களின் எண்ணிக்கையை மிகவும் குறைத்து விட முடியும்.

எனவே வெண்ணீக்களின் பரம்பல் மற்றும் அதனது தாக்கத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது. இதனது பெருக்கம் எமது சூழலுக்கு இணைவானதாக இருப்பதால் சேதம் அதிகரிக்கவும் கூடும். வெண்ணீ பல்வகைத் தன்மை கொண்ட உணவுப் பழக்கமுடையதாக இருப்பதனால் அது வீடுகளில் வளர்க்கப்படும் அழகுத் தாவரங்களில் அகன்ற இலைத் தாவரங்களில் இதனது-குடிகளைக் காணலாம். இதுவும் வெண்ணீக்களின் பெருக்கத்தை அதிகரிக்க காரணமாக இருக்கின்றன.

வெண்ணீக்களை கட்டுப்படுத்துவது பற்றி இதற்கு முதல் கட்டுரையில் தந்திருக்கின்றேன். வெண்ணீக்களைப் போல வெப்பநிலை அதிகரிப்பிற்கு பனிப்பூச்சி (Thrips) என்னும் ஒரு வகை பூச்சியும் மாற்றத்தை விரைந்து காட்டும். பனிப்பூச்சியின் தாக்கம் மிளகாயில் மாதுளம்பழத்தில் நிலக்கடலையில் இன்னும் தேயிலையில் அதிகமாக காண முடியும். பனிப்பூச்சியும் தாவரங்களின் இலைகளில் சுரண்டி உறுஞ்சக் கூடிய வகையினதாகும். இவற்றின் தாக்கத்தினால் இலைகள் மேல்நோக்கி சுருண்டுவிடும். இவற்றினது தாக்கத்தையும் இலகுவில் இனங்காண முடியும்.

இவை தவிர சிற்றுண்ணி (Mites) எனப்படும் ஒருவகை அங்கியும் அதிகரித்த வெப்பநிலைக்கு ஏற்ப பெருக்கமடையும் தன்மையைக் கொண்டுள்ளது. அநேகமாக சாறு உறுஞ்சும் அங்கிகள் வெப்பநிலைக்கு இயைவ்டைந்து பலகிப் பெருகுவதனை நாம் அறிவுபூர்வமாக புரிந்து கொண்டால் இந்த வெப்பநில்ல உயர்வினை வயலில் வீடுகளில் குறைப்பதற்கான வேளாண் காடுகள் போன்றதொரு தன்மையை உருவாக்குதல் மிகவும் சிறந்தது. அதாவது பல்வகைத் தன்மையுடைய தாவரங்களை இணைத்து பயிர்ச் செய்கையை ஏற்படுத்துவதன் மூலம் வெப்பநிலை உயர்வை ஓரளவிற்கு சமாளிக்க முடிகின்றது.

மொத்தத்தில் காலநிலை மாற்றம் என்னும் போது மாற்றத்தை நாம் உணரக் கூடிய வெப்பநிலையின் அளவுகளில் ஏற்படும் மாற்றம் இனி இப்படியான சிறுபோகத்தில் ஏற்படப் போகின்றது. அதற்கேற்ப நாம் எமது பயிர்களை, தாவரங்களை வளர்த்து வெப்பநிலையினாலான தாக்கத்திலிருந்து பயிர்ச் செய்கையையும் எம்மையும் காப்பாற்றிக் கொள்ளலாம். வீதி அகலிப்பு மற்றும் வேறு தேவைகளுக்கு மரங்களை அகற்றும் போது அவசியம் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மரங்களை அகற்றுவதை தவிர்ப்பது அவசியமானதாகும். விவசாய செய்கையில் பல்வகைத் தன்மையை முழுமையாக உள்ளீர்த்தால் இந்த இடரை நாம் எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் கல்லூரி-கொழும்பு
# க.பொ.த (சா/த) மூன்றாம் தவணைப் பரீட்சை
# தமிழ் பகுதி - I

பகுதி I

தடித்த எழுத்தில் அமைந்துள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) "பரிபவம் என்பது பிறரால் பட்டால் அன்றோ………" இங்கு பரிபவம் என்பது.
1. கீர்த்தி 2. புகழ்
3. அவமானம் 4. சிறப்பு

2) "வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக் கியாதுரைப் போம்..." இங்கு விரகிலர் என்பதன் பொருள்.
1. வீரமற்றவர் 2. பலசாலி
3. புத்திசாலி 4. சோம்பேறி

3) "குற்றம் பார்க்கில் சுற்றமில்லை...." இங்கு குற்றம் என்பதன் எதிர்ப்பதம்.
1. சுற்றம் 2. குணம்
3. குறை 4. நலம்

4) "கையின் ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல..." இங்கு இளையோர் என்பதன் எதிர்க்கருத்து.
1. இளைஞர் 2. ஆடவர்
3. வாலிபர் 4. முதியோர்

5) "சீறா விழித்தாள் சிலை வேடன் அவ்வளவில்" இங்கு வேடன் என்பதன் எதிர்ப்பாற் சொல்.
1. வேடினி 2. வேட்டிச்சி
3. வேடுவிச்சி 4. வேருவச்சி

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6) பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களில் இணைப்பு.
1. தென்னை - குரும்பை
2. பனை -நுங்கு
3. மா - மூசு
4. வாழை -கச்சல்

7) நெஞ்சு , வலிமை, பசளை என பல பொருள் குறிக்கும் ஒரு சொல்.
1. மார்பு 2. உரம்
3. மெய் 4. பந்தம்

8) இளவயதினர் மட்டுமன்றி முதியோரும் இன்று செல்பி (Selfie) எடுப்பதிலே ஆர்வமாக உள்ளனர்.
இங்கு செல்பி என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்.
1. புலனம் 2. சுயமி
3. வருடி 4. திசைவி

9) உள்ளீட்டுக்குரிய 'பருப்பு' என்ற மரபுப் பெயருக்குப் பொருத்தமற்றது.
1. அவரை 2. பயறு
3. தினை 4. துவரை

10) அரசர்கள் தமக்குக் கீழ் வாழ்வோர்க்குச் சன்மானமாக விடும் நிலம்.
1. நிந்தகம் 2. மானியம்
3. மாராயம் 4. ஆவணம்

11) கோட்டையைச் சூழ்ந்து அரணாய் அமைந்துள்ள பெருங்காடு.
1. அரண்காடு 2. அகழிக்காடு
3. காவற்காடு 4. மதில்

12) ஒன்றை மற்றொன்றாகக் காட்டி ஏமாற்றுதல் எனும் பொருள் தரும் மரபுத்தொடர்.
1. கயிறு விடுதல்
2. கயிறுருவி விடுதல்
3. கயிறு திரித்தல்
4. கீழறுத்தல்

13) "மட்டையடித்தல்" எனும் மரபுத் தொடரின் பொருள்.
1. செருக்கு அடக்குதல் .
2. கட்டாயப்படுத்தல்.
3. வேலையின்றி அலைதல்.
4. வீணாக்குதல்.

14) 'துணிவின் முன் யாவும் துரும்பு' என்ற பொருளை விளக்கும் பழமொழி.
1. சாணேற முழுஞ் சறுக்கும்.
2. சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் மட்டும்.
3. கோழி மிதித்துக் குஞ்சு சாகாது.
4. கோவிற் பூனை தேவரை மதியாது.

15) "துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்" என்ற பழமொழியின் கருத்து.
1. கோபம் கொடியது.
2. பிழையான பிடிவாதம்.
3. உறவு வேறு உரிமை வேறு.
4. செருக்குடன் நடப்போர் துன்பம் அடைவர்.

16) விசான் கூழை ஊற்றிஊற்றிக் குடித்தான். இங்கு வந்துள்ள ஊற்றிஊற்றி என்பது.
1. அடுக்குத்தொடர்.
2. இரட்டைக்கிளவி.
3. இணைமொழி.
4. அடுக்கிடுக்குத் தொடர்.

17) மதிப்பறியா மடைமை என்பதை உணர்த்தும் உவமைத் தொடர்.
1. சேற்றில் முளைத்த செந்தாமரை போல.
2. கூலிக்கு மாரடிப்பது போல.
3. ஊசியும் நூலும் போல.
4. குரங்கின் கைப் பூமாலை போல.

18) பின்வருவனவற்றுள் எதிர்ப்பொருள் தரும் சொற்களால் அமைந்த இணைமொழி.
1. அன்பும்அருளும்.
2. ஆறஅமர.
3. அருமைபெருமை.
4. ஆக்கிஅழித்து.

19) "பாம்பின் வாய்த்தேரை போல" என்ற உவமைத் தொடரின் பொருள்.
1. மீளாஅழிவு.
2. நிலையற்ற தன்மை.
3. அருமைபெருமை.
4. மீளாச்சஞ்சலம்.

20) "நாத்தோம் இல் உரை பதற கதும் என உற்றெழுந்து" இங்கு கதும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்.
1. அமைதி
2. கோபம்
3. விரைவு
4. நிதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

21) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சி அல்லாதது.
1. தேரூர்ந்தது
2. தமிழமுதம்
3. கடலலை
4. கற்சிலை

22) வேற்றுநிலை மெய்மயக்கம் இடம்பெற்ற சொல்.
1. பக்கம் 2. கொக்கு
3. பந்து 4. சத்து

23) பின்வருவனவற்றுள் பகுபதமாக அமைந்தது.
1. அன்பு 2. ஆந்து
3. அகம் 4. ஆடல்

24) ஒடு என்னும் உருபு கலப்புறு பொருளில் இடம்பெற்ற தொடர்.
1. பூவோடு நாரும் மணம் வீசும்.
2. பசியோடு இருந்தார்.
3. நண்பனோடு சென்றான்.
4. ஊரோடு சென்றுவிட்டார்.

25) "பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது" என்பதிலுள்ள விழுந்தவனை என்பது.
1. குறிப்பு வினைமுற்று
2. தெரிநிலை வினைமுற்று.
3. வினையாலணையும் பெயர்.
4. காரணப்பெயர்.

26) மிதுனன் அருணாக்கொடி கட்டியிருந்தான் இங்கு அரை நாண் கொடியை அருணாக்கொடி என்பது.
1. இலக்கணமுடையது
2. இலக்கணப்போலி
3. இடக்கரடக்கல்
4. மரூஉ

27) நிமலன் நன்றாகப் படித்தான். நிமலன் சிறந்த பெறுபேறு பெற்றான். இவ்விரு வாக்கியங்களையும் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்.
1. இருப்பினும்
2. அதனால்
3. ஆனால்
4. என்றாலும்

28) 'எல்லோரும் நீடூழி காலம் வாழட்டும்' இங்கு வாழட்டும் என்பது.
1. வியங்கோள்வினை
2. எதிர்மறைவினை
3. ஏவல்வினை
4. குறிப்புவினை

● பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29)
1) வேற்றுமைத்தொகை:- குளக்கரை , தங்கக்காப்பு, மீன்சந்தை
2) வினைத்தொகை :- ஏவுகணை, கடிநாய், பொழிகதிர்
3) பண்புத் தொகை :- வட்டமேசை , கரும்பலகை , கண்ணீர்
4) உவமைத்தொகை :- துடியிடை , மதிமுகம் , தேன்மொழி

30)
1) வேற்றுமை உருபுகள்:- ஐ , கு , ஆல் , அது
2) உவமை உருபுகள் :- போல , புரைய, ஒப்ப, அன்ன
3) இடைநிலைகள் :- கின்று, கிறு, இத், வ்
4) விகுதிகள் :- அன் , ஆன், காண் , ஆள்

● புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31) பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமக்குரிய ................ குறைக்கப்பட வேண்டுமெனக் கோரி போராட்டம் நடத்தினர்.
1. வேதனம் 2. மானியம்
3. வரி 4. சன்மானம்

32) குற்றவாளியைக் கண்ட இடத்தில் கைது செய்யும்படி நீதிபதியால் .................. பிறப்பிக்கப்பட்டது.
1. பிடியாணை
2. அழைப்பாணை
3. பரிந்துரை
4. பிரேரணை

33) வேலைக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ விளம்பரம் .................. வெளிவந்துள்ளது.
1. சுற்றுநிருபத்தில்
2. வர்த்தமானியில்
3. அறிக்கையில்
4. அமைச்சரவையில்

34) இலங்கை மத்தியவங்கி அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் ..................விகிதத்தை அறிவித்துள்ளது.
1. செலாவணி 2. வரி
3. நாணயமாற்று 4. வட்டி

35) தேர்த் திருவிழாவில் வெள்ளம் போல மக்கள் கூட்டம்.
1. திரண்டார்கள்
2. திரண்டது
3. திரண்டனர்
4. திரண்டன

36) சுகாதார அமைச்சு கொரோனா நோயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு ................
1. வந்தது
2. வந்தனர்
3. வந்தார்கள்
4. வருவார்கள்

● தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

தலையின்மேற் சுமந்த கைய
டழலின்மேன் மிதிக்கின்றாள் போல்
நிலையின்மேற் பதைக்குந் தாள
னேகத்தா னிறைந்த நெஞ்சள்
கொலையின் மேற் குறித்த வேடன்
கூர்ங்கணை யுயிரைக் கொள்ள
மலையின்மேன் மயில்வீழ்ந் தென்ன
மைந்தன் மேன் மறுகி வீழ்ந்தாள்.

37) இப் பாட்லில் வெளிப்படும் உணர்ச்சி.
1. பயம் 2. துயரம்
3. மகிழ்ச்சி 4. கோபம்

38) இங்கு கையாளப்பட்டுள்ள உவமைகளின் எண்ணிக்கை.
1. 1 2. 2 3. 3 4. 4

39) இங்கு தழல், கணை என்பன குறிப்பன முறையே.
1. அம்பு , நீர்
2. நெருப்பு , மோதிரம்
3. அம்பு, நெருப்பு
4. நெருப்பு, அம்பு

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) இல்லையேல் வாழ்வில் அறிவியற் கூறுகள் இடர்ப்பட நேரும்.
ஆ) உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்துவரல் வேண்டும்.
இ) அறியாமை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும்.
ஈ) அறிவோம்பலுக்குக் கல்வி வேண்டற்பாலது.
உ) அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டியதில்லை.

1. ஆ, அ ,ஈ, இ, உ 2. இ, ஆ, உ, அ, ஈ
3. ஆ, அ, ஈ, உ, இ 4. இ, ஆ, அ, உ, ஈ

(1X40=40 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 174





"மதுராந்தகன் - அந்த அசட்டுப் பிள்ளை பெண் என்றால் பல்லை இளிப்பவன் அவன் பட்டத்துக்கு வருவதினால் என்னுடைய விரதம் நிறைவேறி விடாது."

"வேறு எதனால் நிறைவேறும்? உன் விருப்பத்தைச் சொல்லு! நிறைவேற்றி வைக்க நான் இருக்கிறேன்.'

"அரசே! என் சிறு பராஜத்தில் ஒரு பிரபல ஜோசியன் என் ஜாதகத்தைப் பார்த்தான். பதினெட்டுப் பிராயம் வரையில் நான் பற்பல இன்னல்களுக்கு உள்ளாவேன் என்று சொன்னான்."

"இன்னும் என்ன சொன்னான்?"

"பதினெட்டுப் பிராயத்துக்குப் பிறகு திசை மாறும் என்றான். இணையில்லாத உன்னதப் பதவியை அடைவேன் என்று சொன்னான்."

"அவன் சொன்னது உண்மைதான்! அந்தச் ஜோசியன் யார் என்று சொல்லு! அவனுக்குக் கனகாபிஷேகம் செய்து வைக்கிறேன்."

"நாதா!"

"கண்ணே!"

"இன்னும் அந்தச் ஜோசியன் கூறியது ஒன்று இருக்கிறது. அதைச் சொல்லட்டுமா?"

"கட்டாயம் சொல்லு! சொல்லியே தீர வேண்டும்!"

"என்னைக் கைபிடித்து மணந்து கொள்ளும் கணவர், மணிமகுடம் தரித்து ஒரு மகா சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வந்து அடிபணிந்து ஏத்தும் சக்கரவர்த்தியாக வீற்றிருப்பார் என்று அந்தச் ஜோசியன் சொன்னான். அதை நிறைவேற்றுவீர்களா?"

பழுவேட்டரையரின் செவியில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் அவருக்கு முன்னாலிருந்த நந்தினியும் அவள் வீற்றிருந்த மஞ்சமும் சுழன்றன. லதா மண்டபம் சுழன்றது. அந்த மண்டபத்தின் தூண்கள் சுழன்றன. எதிரே இருந்த இருளடர்ந்த தோப்பு சுழன்றது. நிலாக் கதிரில் ஒளிர்ந்த மர உச்சிகள் சுழன்றன. வானத்து நட்சத்திரங்கள் சுழன்றன. இருபுறத்து மாளிகைகளும் சுழன்றன. உலகமே சுழன்றது!

### நாற்பதாம் அத்தியாயம்
### இருள் மாளிகை

காணாமற்போன வந்தியத்தேவன் என்ன ஆனான் என்பதை இப்போது நாம் கவனிக்கலாம். இருளடர்ந்த மாளிகைக்கு அருகில் சென்று அவன் மறைந்து நின்றான் என்பதைப் பார்த்தோம் அல்லவா? மந்திரவாதியும் நந்தினியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அவன் முதலில் காது கொடுத்துக் கேட்க முயன்றான்.

ஆனால் அவர்களுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் அவ்வளவாக அவனுக்குச் சிரத்தையும் இல்லை. நந்தினியுடன் பேசிக் கொண்டிருந்தபோது தன் அறிவு தன்னை விட்டு அகன்று ஒருவித போதை உணர்ச்சி உண்டாகியிருந்தது என்பதை இப்போது உணர்ந்தான். மறுபடியும் அவளைச் சந்திக்காமல் தப்பித்துக் கொண்டு போய்விட்டால் நல்லது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்




(நேற்றைய தொடர்ச்சி)

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனனி ஒன்றும் புரியாமல், "பவானி என்ன பண்ற" என்று கேட்டாள். அதற்குப் பவானி, "எலிக்கு பொறி வைக்கனும்இல்லையா? அப்போ தானே மாட்டும் பொறு" என்றாள்.

ஆர்வத்தை தூண்டிய வாறு. உணவு இடைவேளை முடிந்து விளையாட்டு நேரம் ஆரம்பம் ஆனது. அனைவரும் விளையாட்டு மைதானம் சென்றனர். உமாவிற்கு விளையாட்டில் நாட்டம் இல்லை. எப்போதும் வரமாட்டாள். வழக்கம் போல அவள் வகுப்பில் இருந்தாள். இதுதான் பவானியின் திட்டத்திற்கு ஆணிவேர். விளையாட்டு நேரம் முடிந்து அனைவரும் வகுப்பிற்கு வந்தனர். அடுத்த நேரத்திற்கு ஆசிரியர் உள்ளே நுழைந்தார். பவானி அனைவரின் முன்னிலையில், "மிஸ் என்னோட பேனாவை காணோம் என்றாள் கண்ணீருடன்.

ஆசிரியருக்கு திகைப்பு." எடுத்தவர்கள் யாராக இருந்தாலும் அதைக் கொண்டு வந்து தரும்படி சொன்னார்கள். அனைவரும் விழித்தனர். உமா உட்பட. ஜனனிக்கு மட்டும் தான் உண்மை தெரியும். அவளும் பேசாமல் நடக்கப் போவதை எதிர் நோக்கி காத்திருந்தாள். பொறுத்துப் பார்த்த ஆசிரியர் அனைவரின் பையையும் பவானியின் முன்வைத்து சோதனை செய்தார்.

உமாவும் பயமின்றி காட்டினாள். ஆசிரியர் உள்ளே கைவிட்டார். பேனா வந்தது. உமா திகைத்துப்போனாள். அவள் மட்டும் தான் கடைசியாக வகுப்பில் தனியாக இருந்தாள் என்பதைத் தெரிந்து கொண்ட ஆசிரியர் உமாவைத் திட்டித் தீர்த்தார். உமாவிற்கு என்ன நடக்கிறது என்பது புரியவில்லை. அழுது கொண்டு இருந்தாள். திருடுவது குற்றம். நாளை தலைமை ஆசிரியரை பெற்றோருடன் சந்திக்க வேண்டும் என ஆசிரியர் கூறினார். இதைக் கண்டு ஜனனிக்கு புன்முறுவல் ஏற்பட்டது. தனக்காக பவானி இதைச் செய்ததை உணர்ந்த அவள், பவானியை கட்டித் தழுவிக் கொண்டாள்.

மாலை தனது பெற்றோரிடம் நடந்ததைக் கூறினாள் பவானி. அதற்கு அவர்கள் பாராட்டவில்லை. மாறாக, "நீ புத்திசாலித்தனமாக இந்தக் காரியத்தை பண்ணிருக்க. ஆனா, நேர்மையாக பண்ணல. நாளைக்கு மிஸ்கிட்ட நடந்த எல்லாத்தையும் சொல்லிடு. அவங்க பாத்துப்பாங்கனு" என்று பவானியின் பெற்றோர் அறிவுரை வழங்கினார். பவானிக்கு அது சரி எனப் பட்டது. மறுநாள் உமா பெற்றோருடன் தலைமை ஆசிரியர் அறை முன் இருந்தாள்.

பவானி ஆசிரியரிடம் சென்று நடந்த எல்லாவற்றையும் கூறினாள். தனது செயலுக்கு மன்னிப்பும் கேட்டாள். உமாவும் தனது தவறை ஒப்புக் கொண்டு ஜனனியிடம் மன்னிப்புக் கேட்டாள்.

ஆசிரியர் பவானியின் அறிவுத்திறனை பாராட்டினார். அவளின் நேர்மைக்கும் அறிவுக்கும் பரிசு வழங்கினார்.

என்ன குட்டிஸ் பவானியோட கதை எப்படி இருந்தது. நீங்களும் பவானி மாதிரி நேர்மையாவும் அறிவாகவும் இருக்கனும். அதே நேரத்துல நேர் வழியில தான் அறத்தை நிலைநாட்டனும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். ~ விவேகானந்தர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## கோட்டா - சந்திக்காத அரசியல் ரணில் - சந்திக்கின்ற அரசியல்

அரசியல் என்பது சதுரங்க விளையாட்டு போன்றது.

ஆக அரசியல் களத்தில் நின்று நிலைப்பதாயின் நிதானம், பொறுமை, சமயோசிதம், அணுகுமுறை என்பன மிகவும் முக்கியமானவை.

இதில் எந்தப் பகுதி பலயீனப்பட்டாலும் சம்பந்தப்பட்டவரை அரசியல் களம் தூக்கி எறிந்துவிடும்.

எனினும் இந்த உண்மையை உணர்ந்து கொள்வதில் அரசியல்வாதிகள் பலரும் பின்னடிக்கின்றனர்.

தவிர சிலருக்கு அரசியல் என்பது ஒரு விபத்துப் போல நடந்ததும் உண்டு.

அந்த விபத்தில் கிடைத்த அரசியலை தக்கவாறு பயன்படுத்தியவர்களும் உண்டு.

அதில் நின்று நிலைக்க முடியாமல், தடுக்கி விழுந்தவர்களும் உண்டு.

இதை நாம் கூறும்போது என்ன எல்லாம் இறந்த காலக்கூற்றாக இருக்கிறது என்று நீங்கள் யாரேனும் நினைக்கலாம்.

இறந்த காலத்தைக் கூறி, நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் விளம்புகின்ற நடைமுறையும் நம் தமிழ் மொழியில் உண்டென்பதால், நாம் ஏலவே கூறியது எதிர்காலத்துக்கும் பொருந்தும் எனப் பொருள் கொள்க.

இவை ஒருபுறமிருக்க, நம் நாட்டின் அரசியல் தலைமை பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம் 69 இலட்சம் வாக்குகளுடன் சிம்மாசனம் ஏறியவர் வீழ்ந்துபோனதும் வெறுங்கையோடு பாராளுமன்றம் சென்றவர் அரியாசனத்தில் அமர்ந்ததும் அரசியல் சதுரங்கம் ஆற்றிய எதிர்வினைதான்.

உண்மை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவிக்குரிய இலட்சணங்களை இம்மியும் பின்பற்றவில்லை.

ஒரு நாட்டின் தலைவனுக்குரிய சிறப்பு அவரிடம் இருக்கவில்லை.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற அவர் முச்சக்கரவண்டியில் ஒரு பாடசாலைக்கு செல்கிறார். அங்கு திடீரென ஒரு வகுப்பறைக்குள் புகுந்து ஆசிரியை ஒருவரின் கற்பித்தலில் பிழை காண்கிறார்.

அருகில் உள்ள ஓர் ஆசிரியை கற்பித்தலுக்கு விளக்கம் கொடுக்க முற்பட்டபோது, அவரை அடக்குகிறார்.

இவையெல்லாம் ஓர் ஆட்சித் தலைவனின் இலட்சணமன்று.

மாறாக, பழிவாங்கும் நோக்கமும் சிறுமைத்தனமும் அவரிடம் இருந்துள்ளதையே மேற்போந்த சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

இதற்கும் மேலாக, தான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இனப் பிரச்சினை குறித்து தமிழ்த் தலைவர்கள் எவரையும் அவர் ஒருபோதும் சந்திக்கவில்லை.

அவ்வாறான சந்திப்பை அவர் விரும்பவும் இல்லை.

இதுவே அவரின் பலயீனமாக இருக்க, அவர் பதவியில் இருந்து துரத்தப்பட்டார்.

இப்போது அந்தப் பதவியில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கிறார்.

அவரின் அரசியல் வியூகம் தமிழ் அரசியல் தலைவர்களை அடிக்கடி சந்திப்பது.

இந்தச் சந்திப்பும் கோட்டாபயவின் சந்தியாமையும் ஒன்றாயினும் சந்திப்பதனூடாக காலம் கடத்துகின்ற அரசியலுக்கு சர்வதேசத்தில் நல்ல கிராக்கி உண்டென்பது ஜனாதிபதி ரணிலுக்கு நன்கு தெரியும்.

ஆக, அவர் சந்திக்காமல் விட்டதால் அவரின் அரசியல் கெட்டது.

இவர் சந்திப்பதால் இவரின் அரசியல் செல்வாக்கு வளருகிறது. இதுதான் நிலைமை.

# குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு குறித்து அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

(கொழும்பு)

குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு குறித்து அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,கடந்த காலங்களில் நாட்டில் பரவிய கடுமையான கோவிட் தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் நீண்டகால விளைவாக இந்நாட்டில் கல்வி கற்கும் சிறுவர்களின் சுகாதார நிலை மோசமடைந்துள்ளது.

உண்மையில்,நம் நாட்டின் சிறுவர்கள் ஒரே நேரத்தில் இரட்டை நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.2022 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த சனத்தொகையில் மேலும் 2.5 மில்லியன் பேர் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இந்நாட்டில் பிள்ளைகளின் போஷாக்குக் குறைபாட்டை மேலும் அதிகரிக்கும்.

இதன் காரணமாக குறிப்பாக குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாடு குறித்து அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மீட்பதற்கு தலைமைத்துவத்தை வழங்குவது கல்வி மற்றும் சுகதார அமைச்சின் பொறுப்பாகும். இது அரசாங்கத்தின் பொறுப்புமாகும் என்றார். (ம-7,9)

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியவர்களை

### புகைப்படம் எடுத்து அச்சுறுத்தல்

(சாவகச்சேரி)

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டத்தை சாவகச்சேரி பகுதியில் இராணுவத்தினர் புகைப்படமெடுத்து அச்சுறுத்தும் பாணியில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி சந்தை கட்டடத் தொகுதியின் தங்கியுள்ள இராணுவத்தினரே இவ்வாறு இராணுவ சீருடை மற்றும் சிவிலுடையுடன் புகைப்படமெடுத்து அச்சுறுத்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,30)

## மின்னல் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

(பொலன்னறுவை)

பொலன்னறுவை-சுங்காவில், நெலும்புர பகுதியில் மின்னல் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுங்காவில் நெலும்புர பகுதியைச் சேர்ந்த 30 வயதான இர்பான் என்ற இளைஞரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இந் நிலையில் உயிரிழந்த இளைஞனின் சடலம் புலஸ்த்திகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற் சாலை-கரந்தன், அரச கேசரி பிள்ளையார் கோவிலடி-நீர்வேலி, கரந்தன், மாலை வைரவர் கோவிலடி, போயிட்டி, பொக்கனை, ஊரெழு அம்மன் கோவில் சுழிபுரம், கள்ளவேம்படி, பத்தானைக்கேணியடி, தொல்புரம், சத்தியகாடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மெனிக்பாம் வலயம் 2 நியூ ஸ்ரீல்பவிரி லிமிடெட்-இரும்பு தொழிற்சாலை, [illegible] ஓயா, தந்திரிமலை, [illegible] (கயசிங்கபுர இராணுவ முகாம்), மெனகிக்பாம் வலயம் 3-2, மெனிக்பாம் வலயம் 4 , அழகாபுரி (அடப்பங்குளம்), ஆண்டியபுளியங்குளம்,சுகாதார மையம் இலுப்பைக் குளம், கப்பாச்சி, கதிர்காமநகர், கிறிஸ்தவகுளம்,மெனிக்பாம் வலயம் 3-1, மெனிக்பாம், மெனிக்பாம் (அறிவு தோட்டம்), முகத்தாங்குளம், 2 வது பண்ணை, முகத்தாங்குளம் 1 ஆவது பண்ணை, முதலியார் குளம், நேரிய குளம், பீடியாபார்ம், பீடியா பார்ம் பழைய கிராமம், பெரிய காடு,புதுக்குளம், ஆண்டிய புளியங்குளம், சின்ன குளம், சின்ன சிப்பிக் குளம், தந்திரிமலை வீதி, துட்டுவாகை மகாறம்பைக் குளம் சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இலங்கைக்கான கடன் எல்லையை நீடித்தது இந்தியா

(கொழும்பு)

இலங்கைக்கான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் எல்லை வசதியை இந்தியா ஒரு வருடத்திற்கு நீடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக மருந்துகள் மற்றும் உணவுக்காக பயன்படுத்தப்பட்ட கடன் வசதியை நீடிக்க இலங்கை இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தது.

இந்தநிலையில் தற்போது இந்தியா குறித்த கடன் வசதியை எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு மார்ச் வரை ஒரு வருடத்தினால் நீடித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7,9)

## மே-9 நினைவு கூரலுக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

(கொழும்பு)

கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி அரசாங்கத்திற்கு எதிராக மக்களால் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களை நினைவு கூருவதைத்தடுக்கும்வகையில் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் தடை உத்தரவை கோட்டை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

குறித்த தடையுத்தரவின்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் இல்லம், நிதியமைச்சு மற்றும் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்திற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் காலிமுகத்திடலில் அரசாங்கத்திற்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது 2022 மே 9 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஆதரவாளர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். அதைத் தொடர்ந்து நாட்டில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## தொடருந்து அதிபர்கள் சங்கம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

இலங்கை தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கத்தின் (SLRSMU) மத்திய குழு செவ்வாய்க்கிழமை இரவு முதல் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஒருவருக்கு பிரதிப் பொது முகாமையாளர் (வணிக) பதவியை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க மத்திய குழு அவசர கூட்டத்தைக் கூட்டி இந்தப் பிரச்சினை குறித்து ஆலோசித்து இந்த நியமனத்துக்கு எதிராக உடனடியாக 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கத் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9)

சீரற்ற காலநிலை

## கட்டுநாயக்காவில் விமானம் தரையிறங்குவதில் தாமதம்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானங்களை தரையிறக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாகவே இவ்வாறு சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சர்வதேச நாடுகளில் இருந்து வந்த சில விமானங்கள் மத்தள விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டதுடன் அங்கு சில விமானங்கள் தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




கம்பத்தில் குறுக்காக உள்ள பட்டை (தண்டு) மீனவர்களை தண்ணீரிலிருந்து இரண்டு மீற்றர் உயரத்தில் அமர உதவுகிறது. இதனால் தண்ணீரில் அவர்களின் குறைந்த பட்ச நிழல்கள் தோன்றும். இதனால் கடல்வாழ் உயிரினங்களுக்கு இடையூறு ஏற்படாது.

மீனவர்கள் இந்த ஆபத்தான நிலையில் இருந்து ஒரு தூண்டிலைப் பயன்படுத்தி, கடல் அல்லது ஆற்றின் ஒப்பீட்டளவில் ஆழமற்ற பகுதிகளில் இருந்து நடுத்தர மற்றும் சிறிய மத்தி மீன்களை நன்றாகப் பிடிக்கிறார்கள். கம்பத்தில் அல்லது இடுப்பில் கட்டப்பட்ட பையில் பிடிபட்டதை சேகரிக்கிறார்கள். (படம்-11)

### ஓடு கயிற்றுத் தூண்டில்


ஓடு கயிற்றுத் தூண்டில் மீன்பிடி (படங்கள்- 12, 12a) என்பது நீளமான தங்கூசியில் பொருத்தப்பட்ட கவர்ச்சிகரமான செயற்கை இரையுடன் கூடிய தூண்டில்களால் மேற்கொள்ளப்படும் முறையாகும். இம்முறையில் தூண்டில்கள் இயந்திரப் படகில் இணைக்கப்பட்டு இழுத்துச் செல்வதின் மூலம் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. பெரிய மீன்கள் செயற்கை இரைகளை உண்மை இரைகள் என நினைத்து கௌவுகின்றன.

இதனால் தூண்டிலில் அவை அகப்பட்டுக் கொள்ளுகின்றன. கணவாய் வடிவத்திலும் மீன் வடிவத்திலும் செயற்கை இரைகள் அமைகின்றன. றப்பர், திமிங்கில எலும்பு போன்றவைகளினால் ஆக்கப்பட்டுள்ளன. பொதுவாக இலங்கையில் தெற்கு, தென்மேற்கு கரையோர மீனவர்கள் இம்முறையில் மீன் பிடிக்கிறார்கள்.




ஓடு கயிற்றுத் தூண்டில் (Troling line) படம்-12

இம் மீன்பிடிக்குஃபைபர் கிளாஸ் படகுகள், 34 தொன் மீன்பிடி படகுகள், பன்னால் படகுகள் என்பன பயன்படுகின்றன. இவ்வுபகரணத்தால் அலகுடுவா, பளயா, அறக்குளா போன்ற மீன்களைப் பிடிப்பார்கள். மேற்படி உபகரணத்தால் மீன் பிடிப்பதற்குப் பொருத்தமான காலம் காலை நேரமேயாகும். இதனைக் கையாளுகையில் கயிற்றினை இழுத்துச் செல்வதற்காக உகந்த வேகம் ஒரு மணித்தியாலத்துக்கு 5 அல்லது 6 கடல் மைல்களாகும். இதன் பிரதான கயிற்றின் நீளம் 10 மீற்றர் தொடக்கம் 100 மீற்றர் வரையாகும். மற்றும் சில கயிறுகள் பல்லுபகரணங்களாகவும் கையாளப்படுகின்றன. இழுத்துச் செல்கையில் கொழுக்கிகளில் உள்ள செயற்கையான இரைகளில் மீன்கள் சிக்கிய பின்னர் அவற்றைப் படகினை நோக்கி இழுப்பார்கள்.






ஓடு கயிற்றுத் தூண்டில் (Troling line) படம்-12a



படம் 12a குலைத் தூண்டில்

### குலைத்தூண்டில்மீன்பிடிசாதனம்

குலைத்தூண்டில் (படம் -12a) கொழுக்கியில் செயற்கை இரை பொருத்தப்பட்டு அவ்வாறான தூண்டில்கள் நூலில் கட்டப்பட்டு மீன்பிடிக்கலன் மூலம் இழுத்துச் செல்லப்படும். இவ்வாறு இழுத்துச் செல்லப்படும் இரையை மீன்கள் என நம்பி அவற்றை உண்ண முற்படும் போது தூண்டில் குற்றிக்கொள்ளும். கடலின் மேற்படையில் காணப்படும் மீன்களே இவ்வாறு பிடிக்கப்படும். உ+ம்: அலகொடுவா, அடவல்லா, கெலவல்லா, தோராதனிக்குலைத் தூண்டில் தொகுதிக் குலைத் தூண்டில் தொகுதி என இரண்டு வகைகள் உள்ளன. தனிக் குலைத் தூண்டில் மூலமாகக் கெலவல்லா, தோரா, தலபத்து போன்ற மீன்களும் தொகுதிக் குலைத்தூண்டில் மூலமாக அலகொடுவா, அடவல்லா லின்னா போன்ற மீன்களும் பிடிக்கப்படும். இது வருடம் முழுவதும் பகல் வேளைகளில் மேற்கொள்ளலாம்.

### நீள்தூண்டில்

இதன்மூலம் ஆழ்கடலில் உள்ள பாரிய மீன்கள் பிடிக்கப்படுகின்றன. விசேடமாக கெலவரன், சுறா, கொப்பறாஆகியன. இது கடற்றொழிலாளர்களிடையே மிகப்பிரபல்யமான மீன்பிடி முறையாகும். இதில் தங்கூசிநூல் பிரதான கூறாகும். கிளைக் கயிறு மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள தூண்டிற் கொழுக்கிகள், மிதவைக்கயிறு, மிதவை ஆகியவற்றைக் கொண்டதாகும். இரைகள் பயன்படுத்தப்படும். இது கடலில் செயற்படுத்தப்படும் மீன்பிடி முறை ஆகும்.

மேல்நீர்ப்படை, இடைநீர்ப்படை, அடித்தளநீர்ப்படை ஆகியவற்றிலுள்ள மீன்களைப்பிடிக்க இம் முறை பயன்படுத்தப்படும். நீரின் மேலான படையில் சஞ்சரிக்கும் மீன்களைப் பிடிக்க பயன்படுத்தப்படும் நீள் தூண்டில் மிதப்பு நீள்தூண்டில் எனப்படும். அடிப்பகுதியில் சஞ்சரிக்கும் மீன்களைப் பிடிக்க பயன்படுத்தப்படும் நீள்தூண்டில் படுப்பு நீள் தூண்டில் எனவும் அழைக்கப்படும்.

நீள்தூண்டிலானது நீரில் இடப்பட்டு பொதுவாக 4 மணிநேரத்தின் பின்னர் வெளியே எடுக்கப்பட்டு பிடிபட்டுள்ள மீன்கள் சேர்க்கப்படும். தூண்டிலில் மீன்சிக்கியுள்ள தென்பதை அதில் பொருத்தப்பட்டுள்ள மிதவையின் அசைவில் இருந்து அவதானித்துக் கொள்ளலாம். இது குறைவான சூழல் பாதிப்பைக் கொண்ட மீன்பிடி முறையாகும். ஆழ்கடலில் சுறா, கெலவரன் போன்ற மீன்களைப் பிடிக்க மிதப்பு நீள் தூண்டில்பயன்படுத்தப்படும். முட்சுறா, விளை மீன் போன்ற அடித்தள பாழி மீன்கள் படுப்பு நீள்தூண்டில் மூலமாகப் பிடிக்கலாம். இம்மீன்பிடி முறை என்ஜின் பொருத்தப்பட்ட பாரம்பரிய கலன்கள், சிறிய கண்ணாடி இழை கலன்கள், 3 ½ தொன்படகுகள் ஆகியன பயன்படுத்தப்படும். இவற்றினைப் பயன்படுத்தி பகற்காலத்திலேயே மீன்பிடிக்கப்படும்.

நீள்தூண்டில்தெற்கு, மேற்கு பகுதி தூரக்கடலுக்குள் மார்ச் மாதங்களிலும் மே - செப்டெம்பர் காலப்பகுதிகளிலும் பயன்படுத்தப்படும். தூரக்கடல் மீன்பிடியில்15% மானது நீள்தூண்டில் மீன்பிடி மூலமாகவே கிடைக்கிறது.

### படுப்பு நீள் தூண்டில்

இத்தூண்டிலானது அடித்தள இன மீன்களைப் பிடிப்பதற்காக கடலின் அடிப்பாகப் பகுதியில் இருக்கும் வண்ணம் விடப்படுகின்றது.

ஒரு கயிற்றில் (அது பிரதான கயிறு எனப்படும்) 50 தூண்டில்கள் வரை துணைக் கயிற்றின் உதவியுடன் ஒரு பாகத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் இணைக்கப்பட்டு ஒரு அந்தத்தில் நங்கூரம் அல்லது பாரம் இணைக்கப்பட்டு கடலில் படுக்கப்படுகின்றது. (படம்-14)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்டுடன்...

தீவு பிரதான வீதியில் நேற்று அதி காலை 3.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் புளியம்பக்கடை பகுதியைச் சேர்ந்த தவராசா சாருஜன் (வயது-18) என்ற இளைஞனே சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

கண்டாவளைப் பகுதியில் இருந்து புளியம்பொக்கணை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மாட்டுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் இளைஞன் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் சிறு காயங்களுக்குள்ளானார். சம்பவ இடத்தில் இரண்டு கால்நடைகளும் இறந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,9,104,316)

## கிணற்றினுள்...

துள்ளது.

குழந்தையின் தந்தை வேலைக்கு சென்ற நிலையில் தாயார் சமையல் வேலைகளை செய்துகொண்டிருந்துள்ளார்.

இதன்போது அருகில் உள்ள வீட்டு கிணற்றினுள் குழந்தை விழுந்துள்ளது.

இதன்போது குழந்தை மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை, குழந்தை ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம- 7,9,104)

## பாகிஸ்தான்...

னாள் பிரதமர் இம்ரான் கான் இஸ்லாமாபாத் நீதிமன்ற வளாகத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளுக்காக இஸ்லாமாபாத் நீதிமன்றத்திற்கு சென்ற சந்தர்ப்பத்திலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அல்-காதிர் (Al-Qadir) எனப்படும் அறக்கட்டளை தொடர்பான வழக்கிலேயே பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்டுள்ளதாக இஸ்லாமாபாத்தின் பொலிஸ் உ்யரதிகாரியொருவர் கூறியுள்ளார்.

ஊழலுக்கு எதிரான தேசிய பொறுப்புக்கூறல் பணியகத்தினால் இது தொடர்பில் மே முதலாம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

## போலி நாணயத்...

செய்யப்பட்டார்.

அந்தச் சந்தேகநபருடன் தொடர்புடைய இளைஞரே யாழ்ப்பாணம் நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வீதியில் பெண்கள் தங்கும் இல்லத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மின்னியல் அச்சு இயந்திரத்தை நேற்று முன்தினமிரவு வேறு இடத்துக்கு மாற்ற முற்பட்டவேளை இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் சந்தேகநபரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட மன்று வழக்கு விசார ணைகளை குற்ற விசாரணைப் பிரிவுக்கு (சிஐடி) மாற்ற அனுமதியளித்தது. (ம-7,9,33)

## பௌத்த சின்னங்...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம், விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

சிங்களவர்களின் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு, பொறுமையை சோதிக்க வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கட்டளைகள் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதற்கு வரலாற்று ரீதியில் பல சான்றுகள் உள்ளன. பௌத்த தொல்பொருள் சின்னங்கள் நாடு முழுவதும் காணப்படுகின்றன. ஆகவே பௌத்த மத உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கையில் வாழும் அனைவருக்கும் உண்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ்ப் பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த மதத்துக்கும் பௌத்த புராதன தனித்துவத்துக்கும் எதிராக திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். பௌத்த மதத்தை அழிக்கிறார்கள். சிங்களவர்கள் பிற மதங்களை அழிக்கவில்லை என்பதை உறுதியாக குறிப்பிட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த சின்னங்களை பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகள் திட்டமிட்டு அழிக்கிறார்கள்.

பௌத்த மத வழிபாடுகளுக்கு பல்வேறு வழிகளில் தடையேற்படுத்துகிறார்கள். வெடுக்குநாறி பகுதியில் பௌத்த புராதன சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் உட்பட விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் யுத்தம் தீவிரமடைந்த காலத்தில் கொழும்பில் இந்துக்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டார்கள், தேர் இழுத்தார்கள், சிங்கள பௌத் தர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஆகவே சிங்களவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. அந்த பொறுமையை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் சோதிக்கக்கூடாது.

தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட முன்னர் நாட்டில் இனப்பிரச்சினை என்பதொன்று உள்ளதா என்பதை ஜனாதிபதி ஆராய வேண்டும். இல்லாத பிரச்சினைகளை தோற்றுவித்து அதனை இனப்பிரச்சினை என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

ஆகவே பௌத்த மத மரபுரிமைகளை பாதுகாக்க ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தவுள்ளோம் என்றார். (ம-7,9)

## பாதிக்...

சாலை வளாகத்தில் நடைபெற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் மனநோயாளிகள் வேகமாக அதிகரித்து வருவதற்கான காரணங்கள் குறித்தும் சிறப்பு ஆய்வு நடத்தினோம்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியே இதற்கு முக்கிய காரணம் என்பது எமக்கு தெளிவாகியது.

இது மிகவும் பிரச்சினைக்குரிய நிலையாகும். ஒரு நாட்டில் முடிவெடுக்கும் நபர்கள் சரியான மன ஒருமைப்பாடு இல்லாமல் செயற்படும்போது, நாடும் மக்களும் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும். மன நெருக்கடிகள் அதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

நாட்டை ஆளும் மக்கள் எவ்வாறு மன ஒருமைப்பாடு இல்லாமல் செயற்படுகிறார்கள் என்பதற்கு இலங்கை அரசியலில் பல உதாரணங்களைச் சொல்ல முடியும்.

தாங்கள் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது பலருக்குத் தெரியாது. நம் நாட்டு அரசியலில் இப்படிப் பட்டவர்கள் ஏராளம்.

முறையான சிகிச்சையை மேற்கொள்வதன் மூலம் குழப்பமான மனதைத் தெளிவுபடுத்தலாம். தேவையான ஆலோசனைகளை முறையாகப் பெறுவது மிகவும் முக்கியம் என்றும் மருத்துவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7,9)

---

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 09/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1564
வெற்றி இலக்கங்கள்
துலாம் 5 7 0 0 3 4
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**
திகதி - 2023.05.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1139
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 04 20 36 67
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

**கொவிசெத**
திகதி 2023.05.09
சீட்டிழுப்பு இலக்கம் 3351
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 49 54 72 75
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 09/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1457
வெற்றி எழுத்து A சுப்பர் இலக்க 24
வெற்றி இலக்கங்கள் 22 38 54 58

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.05.09
சீட்டிழுப்பு இலக்கம் 418
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 18 48 51 62
மீனம்
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2023/05/09
சீட்டிழுப்பு இலக்கம் 5109
ஆங்கில எழுத்து P
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 9 2 7 2 8
தேசிய லொத்தர் சபை

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 2083
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.05.09
தினம் செவ்வாய்க்கிழமை
F 01 11 21 63
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,844,300/-
அபிவிருத்தி லொத்தர் சபை DLB www.dlb.lk

**சனிதா Shanida**
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.05.09
வெற்றி வாரம்: 4244
வர்ணம்:பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,180,464.80
வெற்றி இலக்கங்கள் 22 24 47 58
ஆங்கில எழுத்து A
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சசிரி**
வெற்றி வாரம் 321
சீட்டிழுப்பு திகதி 2023.05.09
ஊதா
வெற்றி இலக்கங்கள் 17 | 25 | 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,957,960/-

**ராசி**
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,755,777/-
திகதி 2023-05-09
வெற்றி வாரம் 3795
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 18 23 30 33
கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,510,160/-

**ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்**
W 32 10 46 50 55
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1259
வர்ணம் மஞ்சள் பழுப்பு
திகதி 2023.05.09 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 328,436,742.20
தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
DLB DEVELOPMENT LOTTERIES

**அத கோடிபதி ADA KOTIPATHI**
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 1909
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.05.09
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 84,107,186.60
வெற்றி இலக்கங்கள் 27 37 41 59
ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15497)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15499)



## உள்நாட்டு உடனடி வேலைவாய்ப்பு

நாட்டின் வேலைவாய்ப்பு பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் மாவட்ட ரீதியாக புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மற்றும் ஆரம்பிக்கப்பட்ட எமது W.E.C நிறுவனத்தின் கிளைகளுக்கு துடிப்பான இளைஞர் யுவதிகள் சேர்க்கப்படவுள்ளனர். அவரவர் கல்வித் தகைமைக்கேற்ப பதவிகள் வழங்கப்படும். கல்வித் தகைமை குறைவான பட்சத்தில் திறமைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும். முன்அனுபவம் தேவை இல்லை. பயிற்சிகள் வழங்கப்படும். பயிற்சியின் போதும் பயிற்சியின் பின்னரும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். நேர்முகத் தேர்வின் போது நபர்கள் தெரிவு செய்யப்படுவார். ஆர்வமுள்ளவர்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கத்தை 077 985 8580 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்.

076 544 3163, 077 689 3656
021 722 3317 (14070)



## வீடு வாடகைக்கு தேவை

கச்சேரி, நல்லூர், அரியாலை போன்ற பிரதேசங்களில் வீடு வாடகைக்கு தேவை. (14075)

076 738 6189



## மணமகள் தேவை

வவுனியாவைச் சேர்ந்த- பி.திகதி 15/01/1987 ,நேரம் அதிகாலை 4.55 மணி, இந்து-மிதுனம் (புனர்பூசம்) அவுஸ்ரேலியாவில் (Computer Engineer)பணிபுரியும்-மணமகனுக்கு அழகும் நல்ல குணமும் உள்ள மணமகள் தேவை. (C-6513)

077 907 3437


## மும்பை வெற்றி




பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 199 ரன்களை பெற்றது. 200 என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 16.3 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. (ம)


## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு (C-6515)

வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா (C-6515)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



## புதிய பிளாஸ்ரிக் போத்தல் விற்பனைக்கு

எம்மிடம் 1000ml, 750ml, 500ml, 325ml, 200ml, 100ml, 50ml, 28ml புதிய பிளாஸ்ரிக் போத்தல்களை மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

குறிப்பு - நல்லெண்ணெய்,நெல்லிக்கிரஷ், பனங்களி உற்பத்தியாளர்களுக்கு ஏற்றபிளாஸ்ரிக் போத்தல்களும் எம்மிடம் உண்டு. (C-6502)

சிவா நறுமணப்பூங்கா
இல 288 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
021-222 2567



## விசேட விலைக்கழிவு

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட விநியோக உரிமை முகவராகிய சிவா நறுமணப் பூங்காவில்,ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள்,வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். (C-6514)

021 222 2567

சிவா நறுமணப்பூங்கா,
இல-288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)



## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம் (15537)

077 544 8503



## வேலையாட்கள் தேவை

யாழ் நகரிலிலுள்ள பிடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண்,பெண் வேலையாட்கள் உடன் தேவை.

① பில் கிளார்க் ③ பைக்கிங் செய்பவர்
② விற்பனையாளர் ④ வரவேற்பாளர் (15500)

077 748 8093
077 699 7777


# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்


## நன்றி நவில்லும்

அமரர்

## வ.இ.கதிரேசு இரத்தினசபாபதி (J.P)

நயினாதீவு – 8

(ஓய்வு நிலை விவாகப்பதிவாளர்)



தோற்றம் 04.12.1940

மறைவு 11.04.2023

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.05.2023) வியாழக்கிழமை காலை 7.00 மணிமுதல் எமது இல்லத்தில் இடம்பெற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வுகளும் முற்பகல் 11.00 மணியளவில் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள சிவஹாமி மஹால் திருமண மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

“உற்றவர், உறவிலுள்ளோர் உறுதுணையாக நின்றோர்
மற்றுவாய் மொழியில் துயரை மறந்திடத் தேறல்தந்தோர்
இற்றைநாள் வரையாயிருந்து எமக்குரமூட்டி நின்றோர்
அத்தனை பேர்க்கும் நன்றி நவில்கின்றோம் கரங்கள் கூப்பி”

“ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!”

இல. 30/6, நாவலடி லேன்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்

(14071)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.